பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 16 செவ்வாய்க்கிழமை (29-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:65

# பாலசிங்கத்துடன் நோர்வேக் குழு நேற்று மூன்று மணி நேரம் பேச்சு!

## இருதரப்புப் போர் நிறுத்த நெறிமுறைகள் பற்றி ஆராய்வு

லண்டன்,ஜனவரி29

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிரந்தர போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வே அனுசரணைக் குழுவினர் நேற்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து மற்றொரு சுற்றுப் பேச்சை நடத்தினர்.**

**சுமார் 3 மணித்தியாலங்கள் நடைபெற்ற இப்பேச்சின்போது நிரந்தர போர்நிறுத்தக் காலத்தில் இரு தரப்பும் கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தலைமையிலான நோர்வேக் குழுவில் நோர்வேயின் முன்னாள் விசேட தூதரும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் தற்போதைய ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம், அமைச்சு அதிகாரியான கிறிஸ்ரி றொம்ஸ்டால் மற்றும் கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நிரந்தரப் போர்நிறுத்தம் குறித்து இரு தரப்புகளினதும் ஆலோசனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இசற் - மதிப்பீட்டை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் மனு

### உயர்தர மாணவர்கள் தாக்கல்

கொழும்பு,ஜன.29

பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இசற் புள்ளி முறையை (Z- Score) எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் அடிப்படைஉரிமைகள் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்கள் பதினொரு பேர் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் 9 அதிகாரிகள், பிராந்தியக் கல்விக்கான அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவைத் தாக்கல் செய்துள்ள மாணவர்கள் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இறுதித் தடவையாகத் தோற்றியவர்களாவர்.

பல்கலைக்கழகத் தெரிவுக்கு இசற் புள்ளி முறையைப் பயன்படுத்துவது, விதிமுறைகளுக்கு ஒவ்வாதது தமது அடிப்படை உரிமைகளை மீறும் செயல் - என்று மனுதாரர்கள் மேல் நீதிமன்றத்திடம் முறையிட்டுள்ளனர். (ஒ)

### கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு

## நோயாளரை ஏற்றிவருவதற்கு பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

வவுனியா,ஜன.29

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகளில் இருந்து அவசர நோயாளர்களை வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக மனிதாபிமான ரீதியில் பஸ் சேவை ஒன்றை நடத்த அனுமதிக்க வேண்டும்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இந்தக் கோரிக்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர் ஈஎஸ்புஎத்சிங்கா விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் அப்பிரதேச மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அந்த மாவட்டங்களில் உள்ள அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. தற்சமயம் எம்மிடம் இரு அம்புலன்ஸ்கள் மட்டுமே உள்ளன. இதனால் பெரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம் : தமிழ்நெற்)



## உயிலங்குளம் வீதி வியாழனன்று திறப்பு

மன்னார்,ஜன.29

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கும் இடையிலான உயிலங்குளம் பாதை நாளைமறுதினம் 31ஆம் திகதி போக்குவரத்துக்குத் திறக்கப்படவிருக்கின்றது.

இந்த வீதி திறக்கப்பட்ட பின்னர் ஆரம்பத்தில் தினமும் 250 பொதுமக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. இன்றுமுதல் போராட்டம்

கொழும்பு,ஜன.29

நோர்வே உதவியுடன் மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகளை எதிர்த்து தேசிய அளவில் போராட்டங்களை நடத்தப்போவதாக ஜே.வி.பி. நேற்று அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி இன்றுமுதல் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தெஹிவளை மற்றும் மஹரகமவில் பிரதான ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன. மாவட்டத் தலைநகரங்களில் கூட்டங்களை நடத்தவும் ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

ஆயுதங்களையும், தனிநாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப் புலிகள் கைவிடும் வரை அவர்கள் மீதான தடையை அரசு நீக்கக் கூடாது என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. (ஒ-3)

## தமிழ்ப் பெண்கள் மீது படையினர் புரியும் பாலியல் சித்திரவதைகள் அதிகரிப்பு!

### இலங்கை நிலைமை பற்றி மன்னிப்புச்சபை அறிக்கை

லண்டன்,ஜன.29

இலங்கையில் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் கடந்த ஆண்டில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு அதிகரித்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டிருப்போரை பாலியல் பலாத்காரம் செய்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதை இராணுவத்துக்கும், கடற்படையினருக்கும், பொலீஸாருக்கும் தெரிவிக்கும்படி புதிய அரசிடம் மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் பெரும்பாலானவை உள்நாட்டுப் போர் சம்பந்தமானவை. இதில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களே என்றும் மன்னிப் புச் சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதை தொடர்பாக குற்றச்சாட்டுகளை பொலீஸாரோ நீதிமன்றங்களோ இதுவரை விரிவாக - திறமையாக ஆராய்ந்தது கிடையாது என்றும் மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியிருக்கிறது. (ஐ--4-ரி)

### கேதீஸ்வரம் - மன்னார் பஸ் போக்குவரத்து நேற்று ஆரம்பம்

மன்னார்,ஜன.29

மன்னார் நகருக்கும் திருகேதீஸ்வரம் ஆலயத்துக்கும் இடையேயான பஸ் போக்குவரத்து நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு நகரில் இருந்து புறப்பட்ட பஸ் சிறுநாவல்குளம் சோதனை நிலையத்தில் வைத்து பயணிகள் மற்றும் பைகள் சோதனை செய்யப்பட்ட பின்னர் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அனு

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை முடிந்த பின்னரும் சிறையிருப்போருக்கு விடுதலை

கொழும்பு,ஜன.29

வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் சிறைகளில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் முதற்கட்டமாக விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்.

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் எனக் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் முடிவடைந்தவர்கள் மற்றும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறைகளில் உள்ளவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர் - என்று அமைச்சர் மேலும் கூறினார்.(ஐ-3)

## மூதூரில் புலிகளின் பகுதிக்கு மீண்டும் செல்வார் தொண்டா

கொழும்பு,ஜன.29

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களின் நிலைமையைப் பார்வையிடுவதற்காக மீண்டும் அங்கு விஜயம் செய்யப்போவதாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

மூதூரில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் உள்ளூர் உறுப்பினர்களுடன் பேசிவிட்டுத் திரும்பிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மூதூரில் விடுதலைப் புலிகளு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி

# கிழக்கில் எதிர்வரும் ஞாயிறன்று இரு இடங்களில் பாதயாத்திரை!

கொழும்பு,ஜன.29

★ விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கவேண்டும்.

★ ஐக்கிய தேசிய முன்னணி இனவாதிகளுக்கு அடிபணியாமல் போர்நிறுத்தத்தை நிரந்தரமாக்கி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி, சகல தமிழ்க் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும்.

மேற்படி மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து கிழக்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பாதயாத்திரை நடத்தப்படவுள்ளது.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான த.தங்கவடிவேல், ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை மட்டு நகர் காந்தி சதுக்கத்தில் முடிவடையும். அங்கு பொதுக்கூட்டம் இடம்பெறும்.

கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் பாண்டிருப்பில் இருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை அக்கரைப்பற்றில் முடிவடையும். பின்னர் அங்கு கூட்டம் ஒன்று இடம்பெறும்.

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்தச் சாத்வீகவளியான பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பிரமுகர்கள் தெரிவித்தனர் (ஐ-3-173)

## தைப்பூச வழிபாட்டுக்காக நேற்று

# நயினாதீவு சென்ற பக்தர்களுக்கு சோதனைக் கெடுபிடியால் சிரமம்

தைப்பூச தின வழிபாட்டுக்காக நேற்று நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் சென்ற பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கடற்படையினரின் சோதனை மற்றும் பாஸ் கெடுபிடிகள் காரணமாகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாகக் கூறப்பட்டது.

தீவுப் பகுதிக்குச் செல்லும் பயணிகள் அனைவரும் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்து விட்டு, பாஸ்களைப் பெற்ற பின்னரே பயணத்துக்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் நேற்றைய தினம் கடற்படையினர் அல்லைப்பிட்டி, குறிகாட்டுவான் ஆகிய இடங்களில் வைத்து பயணிகளுக்கும், பக்தர்களுக்கும் இரு வேறு வகையான பாஸ்களை (அனுமதிச்சிட்டைகளை) வழங்கினர்.

இதன்படி அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் அடையாள அட்டையைச் சமர்பித்து பாஸ் பெற்ற பயணிகள் பின்னர் அந்தப் பாஸை குறிகாட்டுவான் கடற்படையினரிடம் சமர்ப்பித்து வேறொரு பாஸைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறு பயணிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டைகளும், பாஸ்களும் முறையே அல்லைப்பிட்டி, குறிகாட்டுவான் ஆகிய இடங்களில் குவியல்களாகக் குவிக்கப்பட்டிருந்தன. இதனால் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பக்தர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

சுமார் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் வரை பக்தர்களும், வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் மேற்படி சோதனை நிலையங்களில் நேரத்தை வீணாகச் செலவிட நேர்ந்தது.

இதேவேளை -

பண்ணைப் பாலத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் நேற்று தமது சோதனைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். பயணிகள் அனைவரும் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் பயணிகள் சுமார் அரை மணி நேரம் அங்கு காத்திருக்க நேரிட்டது. (ஒ-7)

# பாதுகாப்பு விடயங்களில் அரசு ஜனாதிபதியுடன் ஆலோசிப்பதில்லை!

## பொ.ஐ.முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.29

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து முப்படைத் தளபதியான ஜனாதிபதியுடன் அரசு கலந்து ஆலோசிப்பதில்லை.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசு அமுல் செய்துள்ள மோதல தவிர்ப்பை இரண்டாவது தடவையாக நீடித்தபோது கூட ஜனாதிபதியுடன் அது குறித்து ஆலோசனை செய்யப்படவில்லை என்றும் -

தலைநகர் கொழும்பில் சோதனைச் சாவடிகள் அகற்றியமை உட்பட பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக அண்மையில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் ஜனாதிபதியுடன் கலந்து ஆலோசனை செய்யாமல் எடுக்கப்பட்டிருப்பதாகவும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

(ஐ-3-173)

## வடக்கு - கிழக்கு பிரதேசங்களில்

# குடியேற்றம் தொடரவேண்டும் பஞ்ஞாசீக தேரர் வலியுறுத்தல்

கொழும்பு,ஜன.29

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாது என்றும்-

வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களைத் தொடரும்படியும் -

பௌத்த தேரர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தினார்.

- இவ்வாறு அரசுசார்பு 'டெய்லி நியூஸ்' ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டுக்குட்படாத எந்த நடவடிக்கையையும் ஐ.தே.முன்னணி அரசு மேற்கொள்ளாதென்றும் -

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை நிராகரிப்பதாகவும் -

தேரரிடம் உறுதியளித்த பிரதமர் குடியேற்றங்கள் குறித்து கவனமெடுப்பதாகக் கூறியதாகத் தெரிவிகப்பட்டது.

வண.அக மகா பண்டித மடிகே பஞ்ஞாசீக மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசிபெற்ற பிரதமர் அவருடன் இனப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

உத்தேச சமாதானப் பேச்சு மற்றும் புலிகள் மீதான தடை நீக்கம் என்பன தொடர்பான அறிக்கை ஒன்றை அப்போது வண. பஞ்ஞாசீக தேரர் பிரதமரிடம் கையளித்தார்.

சமாதானப் பேச்சில் பங்கேற்பதற்கு நிபந்தனைகளாக தடை நீக்கம், தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டுக்கு அங்கீகாரம் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளதாகவும் -

தாயகக் கோட்பாடு தவறான வரலாற்றுக் கருத்து என்றும் -

தனது அறிக்கையில் வண. பஞ்ஞாசீக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தடை நீக்கி விடுதலைப் புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இனப்பிரச்சினையை மேலும் மோசமாக்கும் என்றும் தேரர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் தாயகக் கோட்பாட்டை தாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்றும் -

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் வடக்கு - கிழக்கில் வாழ்கின்றனர் எனபதே தமது நிலைப்பாடு என்றும் - தெரிவித்தார். (ஏ)

# நாடும், மக்களும் பெருமைபெற படையினர் சேவையாற்றவேண்டும்

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

கொழும்பு,ஜன.29

நாட்டு மக்கள் அனைவரும் பெருமையடையக்கூடிய விதத்தில் படையினர் சேவை புரியவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய படையினரின் அணிவகுப்பு நிகழ்வில் அமைச்சர் மாரப்பன உரையாற்றினார்.

அங்கு அவர் ஆற்றிய உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் வெளியிட்டிருக்கிறது.

அவரது உரையின் முழு விரைமும் வருமாறு:-

சங்கைக்குரிய சங்கரத்ன அடிகளே, ஏனைய மதங்களைச் சார்ந்த மதப் பிரதிநிதிகளே, தரைப்படைத் தளபதி அவர்களே, ஏனைய உத்தியோகத்தர்களே, இன்று இராணுவப் பயிற்சியை நிறைவேற்றிவிட்டு வெளியேறும் உத்தியோகத்தர்களே, பெரியோர்களே, தாய்மார்களே வணக்கம்.

இந்த விசேடமான சொற்பொழிவு இராணுவப் பயிற்சியை நிறைவேற்றி வெளியேறும் புதிய உத்தியோகத்தர்களுக்கு அமைவாக இருக்கும் என எண்ணுகின்றேன். இன்று உங்கள் நாள். இன்று உங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி நீங்கள் பெருமைப்படலாம். நீங்கள் மட்டுமல்லாது தூரப் பிரதேசங்களில் இருந்து இங்கு சமூகமளித்திருக்கும் உங்கள் அன்பு மிக்கத் தாய் தந்தையர், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் உங்களையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடையலாம். தற்போது நீங்கள் யாவரும் இலங்கை இராணுவத்தில் அதிகாரங்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள். இன்று முதல் நீங்கள் சமூகத்தில் சிறந்த கௌரவம் நிறைந்த ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் ஓர் அணியின் தலைவராகலாம். அந்த அணிக்கு உத்தரவிடும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு உங்கள் தரத்துக்கேற்ப பலவிதமான விசேட சலுகைகள் வழங்கப்படும். நீங்கள் திருப்தியும் ஆடம்பரமும் அடைய இது காரணமாக இருக்கும். ஆனால் நீங்கள் மிகவும் சிந்தனையுடன் செயற்படவேண்டும். உங்களின் ஆரம்பத்தை



கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஒரு தொகுதி படையினரின் அணிவகுப்பு நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உரையாற்றிய காட்சி. (படம் : பாதுகாப்பு அமைச்சு)

ஒருபோதும் மறக்கவேண்டாம். உங்களை இந்த நிலைக்குக் கொண்டு வர உங்கள் பெற்றோர்களும் பெரியோர்களும் பட்ட கஷ்டங்களையும் துன்பங்களையும் மறக்கலாகாது. உங்களையிட்டு அவர்கள் அளவிலா நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் வைத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் நிறுவவேண்டும். அந்த நம்பிக்கையைப் பொறுத்தவரையில் அவர்களுக்காக உங்களால் ஏதாவது செய்தல் மட்டுமல்லாது, எங்கள் தாய் நாட்டுக்காகவும் உங்கள் கடமையை நிறைவேற்றவேண்டும் என எப்போதும் நினைவு கொள்ளல் வேண்டும்.

ஏவலுக்குக் கட்டுப்பட்டிருக்கும் ஒருவரைத் தவிர வேறு எவருக்கும் ஏவல் செய்வதற்கு இயல்பில்லை. உங்களின் தலையாய கடமை, சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் கட்டளைக்குக் கட்டுப்படுத்தலேயாகும். கடமையை நேர்மையுடனும் முழுப் பலத்துடனும் செய்ய நீங்கள் கட்டுப்பட்டிருக்கின்றீர்கள். உங்களுக்குக் கிடைத்திருக்கும் பதவியையிட்டு பெருமிதம் அடையாமல் அதைக் கௌரவமாக நிறைவேற்றி செயற்படவேண்டும். பதவியை மட்டுமல்லாது தன்னுடைய கடமை மேலானது எனக் கருதினால் உங்கள் சிரேஷ்ட உத்தியோகத்தர்களினது மட்டுமல்லாது கீழ்வரிசையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் மரியாதையும் எப்போதும் அளவின்றிக் கிட்டும்.

எதிர்காலத்தில் நீங்கள் ஓர் அணியின் தலைவராகலாம். உங்கள் தலைமைத்துவத்தை சகோதரத்துவத்துடன் ஒன்றிணைத்து உங்கள் கீழ் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அன்பு காட்டல் வேண்டும். அவர்களை ஊக்கமூட்டி விசிஷ்ட சேவையை பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும். ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்களை அதிகரித்து உங்கள் கீழ் இருக்கும் உத்தியோகத்தர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதுடன் அவர்களின் அளவிலாத சேவையை பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

இன்று எமது நாடு மிகவும் துரதிர்ஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எம் தாய் நாட்டை அந்த நிலையிலிருந்து மீட்பதற்கே நீங்கள் இராணுவத்தில் சேர்ந்தீர்கள் என நான் எண்ணுகின்றேன். அந்தப் பங்களிப்புக்கு அரசாங்கம் மட்டுமல்லாது முழு நாட்டு மக்களும் கடமைப்பட்டுள்ளார்கள். இன்று ஒரு புதிய அரசாங்கம் உருவாகியுள்ளது. அந்த அரசாங்கத்தின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு போர் வீரர்களின் கஷ்ட நஷ்டங்கள் சம்பந்தமான புரிந்துணர்வு உண்டு. ஆகையால் வருங்காலத்தில் உங்களுக்காக பயனுள்ள வேலைத்திட்டம் ஒன்று தீட்டப்படலாம் என நம்பிக்கை கொள்ளலாம். எனவே உங்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் வயது முதிர்ந்தோர் மட்டுமல்லாது முழு நாட்டு மக்களும் உங்களையிட்டு பெருமையடைக்கூடிய சேவையை செய்ய உங்களுக்கு பலமும் தைரியமும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் உங்களுக்கு மும்மணிகளின் ஆசீர்வாதம். உங்கள் எல்லோருக்கும் சமாதானம் நிறைந்த சகல பாக்கியங்களுடன் கூடிய புதிய வருடமாகட்டும். என வாழ்த்தி விடைபெறுகின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு பிரதி அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.29

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபராக ஏ.புவனேந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.

கல்வி நிர்வாக சேவை தரம் IIIஇல் உள்ள ஏ.புவனேந்திரனை பிரதி அதிபராக நியமனம் செய்யும் அறிவுறுத்தல் கடிதத்தை மனித வள மேம்பாட்டு கல்வி, கலாசார அமைச்சு நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ளது.

(ஓ)

## தென்மராட்சியில் இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஜன.29

மீசாலை, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ சேவையினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தவுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில மருத்துவ சேவை நடைபெறுமென கழகச் செயலாளர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ம-417)

## கசிப்பு ஒழிப்புக்குழு மீது அஸிட் வீச்சு; ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜன 29

ஏழாலை, குப்பிளான் பகுதிகளில் செயற்படும் கசிப்புக்கு எதிரான செயற்குழுவின் உறுப்பினர்கள் மீது இனந்தெரியாதவர்களால் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு அஸிட் வீசப்பட்டது. இதில் செயற்குழு உறுப்பினர் ஒருவர் காயம் அடைந்தார்.

குப்பிளான் தெற்கு ஞானகலா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் செயற்பட்டுவரும் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் கசிப்பு ஒழிப்பு கண்காணிப்பை முடித்துவிட்டு சனசமூக நிலையத்தில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீதே அஸிட் வீசப்பட்டது. (ஒ-3)

# மத்திய கிழக்கில் முதற்றடவையாக பெண் தற்கொலையாளி தாக்குதல்!

ஜெருசலேம்,ஜன.29

இஸ்ரேலிய நகரான ஜெருசலேமில் பெண் தற்கொலையாளி ஒருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்; 40இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பெண் தற்கொலையாளி ஒருவர் மத்தியகிழக்கில் தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதற்றடவை என்பது குறிப்பிடத்தக்கது.



தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் சோதனை நடத்தும் அதிகாரிகள்.

ஜெருசலேமின் பிரதான வர்த்தக வீதியான ஜாபாவில் ஞாயிறன்று அதிகாலை இந்தத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது.

தற்கொலைக் குண்டுதாரி பலஸ்தீனப் பெண் என இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர். எனினும் தாம் அந்தப் பெண்ணை தற்கொலைக் குண்டுதாரி என அழைக்கவில்லை என்றும், அவர் ஒரு சாதாரண குண்டுதாரி குண்டை வைப்பதற்காக ஓரிடத்துக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தபோது அது வெடித்திருக்கலாம் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தத் தாக்குதலை அடுத்து பலஸ்தீனத் தீவிரவாதிகளைக் கட்டுப் படுத்தவேண்டும் என்று அமெரிக்காவும், இஸ்ரேலும் மிகத் தீவிரமாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

"பெண் தற்கொலையாளிகள் இஸ்ரேலிய நகரங்களில் தாக்குதல் களை நடத்தக்கூடும் என்று அண்மைக் காலமாகவே புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்து வந்தன." என்று மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கிட்ஸன இஸ்ரா தெரிவித்தார்.

பலஸ்தீன அதிகாரசபை இந்தத் தற்கொலைத் தாக்குதலைக் கண்டித் துள்ளது. மேற்குக் கரையில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுவதற்கு அமெரிக்காவின் விசேட தூதர் அந்தோனி ஸினி உடனடியாக மத்திய கிழக்குக்குத் திரும்பி வரவேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

இஸ்ரேலியத் தலைநகரான ரெல் அவிவில் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற இரு நாள்கள் கழித்து இந்தத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



தாக்குதலில் காயப்பட்ட ஒருவரை அம்புலன்ஸில் ஏற்றுவதற்காக அழைத்துச் செல்லும் காட்சி.

# கவிதைகளால் புகழ்பெற்ற 11 வயதுச் சிறுவன் மாரீல்

நியூயோர்க்,ஜன.29



அமெரிக்காவில் அதிகளவில் விற்பனையாகும் புத்தகத்தை எழுதியவர் என்ற பெருமை மாரில் ஸ்டீபநேக் என்ற பதினொரு வயதுச் சிறுவனுக்குக் கிடைத்துள்ளது. மாரில் எழுதிய 'ஜேனீஸ்த்ரு ஹாட் சோங்ஸ்' (இதய கீதங்கள் ஊடாகப் பயணம்), 'ஹாட் சோங்ஸ் அண்ட் ஹோப்' (நம்பிக்கையும், இதய கீதங்களும்), 'த்ரு ஹாட்சோங்ஸ்' (இதய கீதங்கள் ஊடாக) ஆகிய 3 புத்தகங்களிலும் தலா 10 லட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. அவற்றின் விற்பனை தொடர்கிறது.

குணப்படுத்த முடியாத தசை சம்பந்தமான நோயால் பீடிக்கப்பட்டுள்ள மாரில் தனது மூன்றாவது வயதில் இருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கி விட்டார். தசை சம்பந்தமான பரம்பரை நோய்க்கு தனது 3 சகோதரரையும் பறிகொடுத்த மாரில், தான் அனுபவித்த சோகங்கள், ஏக்கங்கள் என்பனவற்றையே கவிதைகளாக வடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெர்ஜினியா, மேரிலாண்டிலில் வசிக்கும் மாரில், தனது தாயார் கொடுத்த உற்சாகமே தன்னை கவிதைகளால் புகழ்பெற வைத்ததாகக் கூறியுள்ளார். இத்தனைக்கும் தன்னைப் பீடித்துள்ள நோயால் தனது வாழ்க்கை விரைவில் முடிந்துவிடும் என்பதை நன்கு புரிந்திருப்பதாக மாரில் தெரிவித்துள்ளார். (ஒ)

# அமெரிக்கப் பத்திரிகையாளர் பாகிஸ்தானில் கடத்தப்பட்டார்

இஸ்லாமாபாத்,ஜன.29

பாகிஸ்தானில் தங்கியிருந்த அமெரிக்கப் பத்திரிகையாளரான டானியல் பேரல் (வயது 38) ஆயுததாரிகள் சிலரால் கடத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வார காலமாக இவரைக் காணவில்லை என்று பொலீஸார் தெரிவித்திருந்தனர். தற்போது இவர் தீவிரவாதிகள் சிலரால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. பத்திரிகையாளரைத் தாம் கடத்தி வைத்திருப்பதற்கு ஆதாரமாக புகைப்படம் ஒன்றைத் தீவிரவாதிகள் ஈ-மெயில் மூலம் பாகிஸ்தான் பொலீஸாருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தப் படத்தில் டானியல் பேரல் தலையைக் குனிந்திருக்க தீவிரவாதி ஒருவர் அவரது தலையை 'பிஸ்டல்' குறிபார்த்து நிற்கின்றார். கியூபாவின் அருகிலுள்ள அமெரிக்கத் தளமான குவாண்டனாமாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை அமெரிக்கா சிறந்த முறையில் நடத்த வேண்டும்



தீவிரவாதிகளால் வெளியிடப்பட்ட படம்



பேரல்

என்றும் இல்லையெனில் பேரல் துண்டுறுத்தப்படுவார் என்றும் கடத்தல்காரர்கள் தாம் அனுப்பிவைத்த ஈ-மெயில் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

கராச்சியில் தீவிரவாத முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக கடந்த புதன்கிழமை சென்ற பின்னர் பேரல் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பேரல் கடத்தப்பட்டதற்கு அவர் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயின் உளவாளி என்ற சந்தேகமே காரணம் என்று பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் பேரல் சி.ஐ.ஏ. உளவாளி என்பதை அந்த அமைப்பும் அமெரிக்கப் பத்திரிகைகளும் மறுத்துள்ளன.

# ரெல் அவிவில் இஸ்ரேலிய பொலீஸார் பலஸ்தீனரைச் சுட்டுக்கொன்றனர்

ஜெருசலேம்,ஜன.29

பலஸ்தீனத் தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் ரெல் அவிவில் அரேபிய வாகனச் சாரதி ஒருவரை இஸ்ரேலியப் பொலீஸார் நேற்று சுட்டுக் கொன்றுள்ளனர்.



சுட்டுக்கொல்லப்பட்ட நபரிடம் இருந்து கைவிரல் அடையாளம் பெறும் அதிகாரிகள்.

பொலீஸாரைக் கண்டவுடன் இவர் ஓட எத்தனித்ததாகவும் அதனாலேயே சுடவேண்டி ஏற்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஜெருசலேத்தில் பெண் தற்கொலையாளி தாக்குதல் நடத்திய ஒரு நாளின் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலில் தாக்குதல் நடத்தவே இவர் வந்ததாக இஸ்ரேலியப் பொலீஸார் கூறுகின்றனர். ஆனால் இறந்த நபரிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் 16 மாதங்களாகத் தொடரும் இஸ்ரேல் - பலஸ்தீன இரத்தக்களரியை மேலும் தீவிரமாக்கும் என்று ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார். (ம)

## பாகிஸ்தானியர் இருவர் உயிரிழப்பு!

இந்தியாவின் ஜார்கண்ட மாநிலத்தில் பொலீஸாருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் பாகிஸ்தானியர்கள் இருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

கடந்த 22ஆம் திகதி கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க மையத்தின்மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் குறித்து விசாரணை நடத்தச் சென்றசமயமே பொலீஸாருக்கும் பாகிஸ்தானியர்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

மதுரை கல்லூரி மாணவிகள்

# 5.2 கி.மீ. நீளமான காகிதத்தில் தொடர்ச்சியாக எழுதிச் சாதனை

சென்னை,ஜன.29

இந்திய குடியரசுதின விழாவை முன்னிட்டு தமிழ்நாடு மதுரை லேடி டோக் கல்லூரி மாணவிகள் மற்றும் ஊழியர்கள் இணைந்து 5.2 கிலோ மீற்றர் நீளமான காகிதத்தில் தொடர்ச்சியாக எழுதிச்சாதனை படைத்துள்ளனர்.

குடியரசுதின விழாவை முன்னிட்டு வித்தியாசமான சாதனைகள் எதையாவது செய்யவேண்டும் என்று மாணவிகள் விரும்பியதன் விளைவே இந்தச் சாதனை என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

கல்லூரி மைதானத்திலேயே இந்தச் சாதனை முயற்சி நிறைவேற்றப்பட்டது. 2 ஆயிரத்து 200 மாணவிகள் மற்றும் கல்லூரி ஊழியர்கள் இணைந்து இந்தச் சாதனையைச் செய்தனர்.

கல்லூரியின் வரலாறு, கதைகள், கட்டுரைகள், காட்டூன்கள், படங்கள் என்பன இந்த 5.2 கிலோமீற்றர் காகிதத்தில் எழுதப்பட்டும் வரையப்பட்டும் உள்ளன.

இந்தச் சாதனையை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்வதற்கு கல்லூரி நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (ம)



இந்தியக் குடியரசு தினத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்ற நடன நிகழ்வு


தை மாதம் பிறந்திட புதிய பொலிவுடன்

ஹில்ஸ் கலர் போட்டோ

இலவசம் 5"x7" புகைப்படம்

* நவீன கணனி முறையில் தரமான புகைப்படப் பிரதிகள்
* கடவுச்சீட்டு/விசா படங்கள் ~ உடனடிச் சேவை
* லெமினேட் செய்த வண்ணப்பட அட்டையுடன் கூடிய அல்பம்
* துரித சேவை ~ வாடிக்கையாளர் திருப்தி

இவற்றுடன் இந்தியாவில் நடைபெறும் உங்கள் இல்லத் திருமணங்களுக்கான சகல ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

* குளிரூட்டப்பட்ட மண்டபம்
* இலங்கை முறையிலான திருமண ஒழுங்குகள்
* வீடு/வாகன வசதிகள்
* பிரயாண ஏற்பாடுகள்
* புகைப்படம்/வீடியோ

தொடர்பு கொள்க:

Hills COLOR FOTO (PVT) LTD.,

ஹில்ஸ் கலர் போட்டோ (பிரை) லிமிடெட்,

298-1/4, காலி வீதி,

வெள்ளவத்தை, கொழும்பு - 06.

தொலைபேசி: 508430, தொலைநகல்: 599238

மின்னஞ்சல்: hills@slt.lk

(C/20291)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

30 தகரங்கள், றீப்பைத் தடிகளுடன் தகரக் கொட்டகை ஒன்று, சோக்கேஸ் அலுமாரி ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ். எஸ்.குமாரசாமி, ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையடி, நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (97538)

குளிர்சாதனப் பெட்டி, டி பிறீசர் என்பன விற்பனைக்கு உண்டு. S.றஞ்சித், 54, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (049)

## வகுப்புகள்

புதிய சங்கீத வகுப்பு நேற்று (28.01.2002) திங்கட்கிழமை தைப் பூச நன்னாளில் 2.30 மணியளவில் ஆரம்பமாகியது. தொடர்பு: திருமதி S.ஜெயகாந்தன், மடம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (037)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவமான, வயது 36, ஆசிரியை (வீசேட பயிற்சி), அனுஷ நட்சத்திரத்துடன் 8இல் நட்பும் பெற்ற, செவ்வாய்த்தோஷம் குறைந்த ஜாதகி பொருத்தமான, அரச/கூட்டுத்தாபன உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தொடர்பு: விள.இல.1441, C/o உதயன், யாழ்ப்பாணம். (033)

## தவறிவிட்டது

மத்தொனி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆனந்தமயில் ஜீவவர்ணன் எனபவரது தே.அ.அ.(இல. 832132250V), வி.அ.அ. (இல090905329), பாஸ் (இல. 106987) என்பன கரவெட்டிக்கும் சயன்ஸ் அக்கடமிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சயன்ஸ் அக்கடமியில் அல்லது சயன்ஸ் சென்ரறில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (046)

பாரதிபுலம், கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சண்முகம் தவமணி என்பவருடைய தே.அ. அட்டை (இல.535722897V), வி.அ. அட்டை என்பன திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கலாசாலை வீதியில் அமைந்துள்ள தாஸ் ஸ்ரோர்சில் ஒப்படைத்து உதவவும். (051)

## வாடகைக்கு

மேற்றிராசனக் கோயிலுக்கு (மரியன்னை பேராலயம்) அருகாக சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு. ஆசிரியர்கள் குடும்பம், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. மேல்மாடிப் பகுதியில் மருத்துவபீட மாணவர்கள் (இருபாலாரும்) விரும்பப்படுவர். C/o உதயன், விளம்பர இல.1442, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (048)

## விளையாட்டு கழகத்துக்கு தடை விதிப்பு

வலி.வடக்கு,ஜன.29

அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழகம் இரண்டு வருடங்களுக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் எந்தவொரு சுற்றுப் போட்டியிலும் கலந்துகொள்ளமுடியாது தடைசெய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்காது அவருடன் தர்க்கம் புரிந்ததால் பிரதேச செயலக ஒழுக்காற்றுக் குழு தடை அறிவிப்பை விடுத்துள்ளது.

இக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கு ஐந்து வருடகாலத்திற்கு சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமலும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (க-86)

## இன்று 'சக்கரம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் சமூக அறிவியல், கலை இலக்கிய இதழான 'சக்கரம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பௌதிகவியல் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும் சிறப்பு விருந்தினராக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேலும் கலந்துகொள்வார்கள். பல்கலைக்கழக தாவரவியல் துறைத் தலைவர் திருமதி ரவிமன்னன் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (ம)

---



நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ

**சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை**

**வணங்கி வாழ்த்திப் பாராட்டுகின்றோம்**

நல்லை நகரில் சைவநெறியும், தமிழ்மொழியும், கலை கலாசாரமும் சிறந்தோங்க சேவையாற்றும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை எழில்மிகு தோற்றத்துடன் புதுப் பொலிவோடு புனரமைத்து பாரெல்லாம் பக்திமயம் பரவப் பத்துத் தினங்கள் பயன் தரும் பல நல்ல நிகழ்வுகளையெல்லாம் சீர்பெற நடத்தி, சைவத்துக்கும் தமிழுக்கும் தம்மையே அர்ப்பணித்து ஞானநெறி வழுவாது சீரிய தொண்டாற்றும் எம் தேவஸ்தான "கௌரவ போசகர் ஸ்ரீலஸ்ரீ நல்லைக் குருமணி" அவர்களை உளத்தால் மலர்தூவி உவகையுடன் பணிந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

*"மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலக மெலாம்"*

தேவஸ்தான பரிபாலன சபையினரும்,
பிரதம ஆச்சாரியாரும், அடியார்களும்.
**ஸ்ரீஞான செல்வவிநாயகர் தேவஸ்தானம்,**
புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(055)

---

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 30 |
| 05 | 12 |
| 1920 | 2001 |

## திருமதி சுப்பிரமணியம் பூரணம்

அன்புக்கோர் இலக்கணமாய் அவனியிலே வாழ்ந்த
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைவதாக.
ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
சுப்பிரமணியம் செல்வரட்ணம் (S.S),
(மக்கள், மருமக்கள்)

*3ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*
(052)

---

ஓம் சிவாயநம

# 45ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் வினாசித்தம்பி ஜெகசோதி

(ஜெயம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08-04-1954 | 16-12-2001 |

கருணையின் வடிவமே!
பாசத்தின் உறைவிடமே - எங்கள் அப்பா
எப்போது உங்கள் முகம் காண்போம்? - இனி
எப்போது உங்கள் குரலைக் கேட்போம்?
கண்மூடி விழிப்பதற்குள் எல்லாம் நடந்துமுடிந்தனவோ!
நிலையில்லா இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து
எங்கே சென்றீர்கள்?
ஆலம் விழுதுகள் போல் உறவுகள் ஆயிரம் இருந்தும் என்ன
வேர் என நீங்கள் இருந்தீர்கள் அப்பா!
அநாதைகளான எங்களுக்கு இனியார் ஆறுதல் அப்பா?

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணரைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

ஜெ.இராசராணி
(மனைவி)
ஜெ.துசிகரன்
ஜெ.துசிதர்
ஜெ.துஷியந்தன்
} பிள்ளைகள்

கதிரமலை
சிவன்கோயில் அருகாக,
சுன்னாகம்.
(021)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு
நிரந்தரப் பதிவாளராக நியமனஞ் செய்யப்பட்டுள்ள,
பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட
யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலையின் பழைய மாணவ

**திருமதி நாகேந்திரராணி தங்கராஜா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறோம்.

கல்விச் சமூகம்,
யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை,
தெல்லிப்பழை.
(047)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1918 | 2001 |
| 02 | 12 |
| 06 | 29 |

## திருமதி நன்னியர் இலட்சுமி

*பண்புடன் பாரில் வாழ்ந்து மறைந்த பாசமுள்ள தாயே!*
*எம்முடன் வாழ்ந்த நாள்கள் என்றும் எம் நெஞ்சை விட்டகலா.*
*ஆத்மா சாந்தி அடைவதாக.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனநிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*
(054)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 | 30 |
| 11 | 01 |
| 1934 | 2001 |

## அமரர் பிலிப் அன்றூ

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

**"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தாங்கள் படுக்கையில் இளைப்பாறுகிறார்கள்"**

*அன்பான பிதாவே!*

எங்கள் குடும்பத்தின் ஒளியாய்த் திகழ்ந்து வான்வீடு ஏகிவிட்டாலும் எம் மனவீட்டைவிட்டு என்றும் அகலா ஒளிவிளக்காய்த் திகழ்ந்த அன்பின் சுடர்விளக்கே!

நித்தியத்தில் என்றென்றும் நின்று பிரகாசிக்க எம்மைக் கண்கலங்க வைத்துவிட்டுப் பிரிந்துசென்று இறைவனில் இரண்டறக்கலந்த முதலாம் ஆண்டு நினைவாக எம் நெஞ்சோடும் நினைவோடும் நிறைந்துவிட்ட அன்புத் தெய்வத்திற்கு எங்கள் இதய அஞ்சலியைச் செலுத்தும் இந்நாளில், இறைவா! அவரது ஆன்மா உமது விண்ணக வாழ்வையும் முடிவற்ற இன்பத்தையும் புனிதரின் தோழமையையும் பெற்று மகிழ உம்மை நம்பிக்கையுடன் மன்றாடுகின்றோம்.

என் பப்பாவின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (30.01.2002) புதன்கிழமை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயம், குழந்தை யேசுவின் ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம் ஆகியவற்றில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

முகவரி:
*பத்தாவத்தை,*
*இளவாலை.*

தற்போதைய முகவரி:
***NURSING HOME,***
***MAIN STREET,***
***JAFFNA.***
(சி-20523)

இவரது விரிவை
நினைந்துவாடும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.
மகன் - மரியோ செல்வா
*(கனடா)*

உதயன்

## அவநம்பிக்கைக்கு இடமளியாதீர்!

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடை நீக்கம் என்பது வெறும் கண்துடைப்பு. வந்துபோன லொறிகளின் எண்ணிக்கைக் கணக்குவழக்குகளை எடுத்துக்காட்டி அரசு புரியும் சித்து விளையாட்டு. இந்தத் தடைநீக்கம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் விதத்தைப் பார்த்தால் அது சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கத்தை எட்டுவதற்கு வழிசமைக்காது என்பது தெளிவு.

வன்னிப் பிரஜைகளின் பிரதிநிதியும் அங்கு செயற்படும் தொண்டு நிறுவனங்களின் தலைவருமான வண. எம்.எக்ஸ்.கருணாரத்னம் அடிகளார் தற்போதைய வன்னி நிலைவரம் குறித்து மேற்கண்டவாறு விசனம் வெளியிட்டிருக்கிறார்.

பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளின் மீதான பொருளாதாரத் தடைநீக்கத்தின் மறுபக்கத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம் மீதான பொருளாதாரத் தடையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசு கடந்த தைப்பொங்கல் திருநாளுக்கு மறுநாள் தளர்த்தியது. அன்றுமுதல் வன்னிப்பகுதிக்கு வவுனியாவில் இருந்து பொருள்கள் லொறிகளில் எடுத்துச்செல்லப்படுகின்றன.

பொருளாதாரத் தடைநீக்க அறிவிப்பையும், அதனைத் தொடர்ந்து பொருள்கள் தாராளமாக எடுத்துச் செல்லப்படுகின்றன என்ற செய்தியையும் அரச ஊடகங்கள் பெரிய அளவில் பிரசாரப்படுத்தி இருந்தன. ஆனால் தடை தளர்த்தப்பட்டு இரு வாரகாலம் கடந்துவிட்ட பிறகும் 'ஆனைப் பசிக்கு சோளப் பொரி' என்ற அளவில்கூட வன்னிக்குப் பொருள்கள் போய்ச்சேரவில்லை என்பதை வன்னிப் பிரஜைகள் குழுத் தலைவரின் பேட்டி வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. அரசு பிரசாரம் செய்யும் அளவுக்கு நிலைமை இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

சுமார் பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு வன்னி மீதான பொருளாதாரத் தடையை ரணிலின் அரசு தளர்த்தியதைத் தமிழ்மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர் என்பது உண்மையே. சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை உருவாக்கும் நல்லெண்ண நடவடிக்கை என்று விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும், சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் அதை அரசு எவ்வாறு நடைமுறையில் - யதார்த்தத்தில் - செயற்படுத்திக் காட்டப்போகிறது என்பதைப் பொறுத்தே இந்த நடவடிக்கையின் நோக்கம் வெற்றிபெறமுடியும்.

பொருளாதாரத் தடைநீக்கத்தைத் தமிழ்மக்கள் வரவேற்றுள்ளார்கள். புலிகளும் அதைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதற்காக ரணிலின் அரசு வடக்குத் தமிழ்மக்களுக்கு ஏதோ கொட்டிக் கொடுத்துவிட்டது என்று எவரும் கூறமுடியாது.

தமக்கு உரியதை - தங்களுக்கும் கிடைக்க உரிமை உடையதை - அதுவும் அவற்றில் ஒரு பகுதியைப் பெறுவதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது அவ்வளவுதான்.

மேலும் விளக்கிக் கூறுவதானால் ஈழத்தமிழர்களுக்கு உரியதான - அவர்களுக்குச் சொந்தமான - அடிப்படை உரிமைகள் பலவற்றை அடாவடித்தனமாகப் பறித்துவைத்திருந்த சிங்கள அரசு. அவற்றில் சிலவற்றை மட்டும் விட்டுக்கொடுக்க முன்வந்திருக்கிறது.

இந்நிலையில் -

வன்னி மக்களுக்கு ஏதோ விடிவு கிடைத்துவிட்டது; அவர்களது துன்பங்களை அகற்றிவிட்டோம் என்று அரசுத்தரப்பு செய்யும் பிரசாரங்களை சர்வதேச சமூகம் நம்பிவிடக்கூடாது.

வண.பிதா கருணாரத்னம் அடிகளார் வெளியிட்டிருக்கும் யதார்த்த நிலைமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவனத்தில் எடுக்கவேண்டும்.

இருதரப்புகளுக்கும் இடையே முன்னர் எப்போதும் இருந்திராத நல்லெண்ணச் சூழ்நிலை உருவாகி வருகின்ற வேளையில், இதுபோன்ற விடயங்களில் அவநம்பிக்கை ஏற்பட்டுவிட அரசு இடமளிக்கக்கூடாது.

### அம்பாறையில் உள்ளூராட்சித் தேர்தல்:

# கூட்டமைப்பின் 'சம்மதம்' குறித்து ஈ.பி.டி.பியினர் கண்டனம்

அம்பாறை,ஜன.29

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் பிரதேசத்துக்குள் உள்ளடங்கும் அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இணக்கம் கண்டிருப்பது கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியது.

அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மா.குணசேகரம் சங்கர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வை நிலைநாட்டுவதற்கு எக்காலமும் பிரிக்கப்படாத வடக்கு - கிழக்கு ஒரு மாநிலமாக அங்கீகரிக்கப்படல்வேண்டும். இதுவே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தமிழ்க் கூட்டமைப்புக் கட்சியினர் இணக்கம் கண்டிருப்பது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியதாகும். வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்து அம்பாறையைப் பிரிக்க தமிழ்க் கூட்டமைப்பில் இருக்கும் சில கட்சிகள் ஏற்கனவே கருத்து தெரிவித்தமையின் தொடர்ச்சியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்குத் தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிக்கும் காரணங்களும் நியாயமானவைகள் அல்ல. உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு சூழ்நிலைகள் சரியில்லை என்று இழுத்தடிக்கும் இதே நபர்கள் அம்மாகாணத்தில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுத்து இருக்கின்றனர். சுமார் இரு மாதங்களுக்கு முந்திய சூழ்நிலை இப்போது மாற்றம் கண்டிருக்கிறது என்பது எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

ஆதலால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தப்படும்வரை அம்பாறை மாவட்டத் தேர்தலும் ஒத்திவைக்கப்படவேண்டும். எனினும் எமது விருப்பத்தையும், வேண்டுகோளையும்மீறி தேர்தல் நடத்தப்படுமானால் எமது நிலைப்பாட்டை மக்களுக்கு எடுத்து விளக்கும் சந்தர்ப்பமாக ஜனநாயக செயற்பாடுகளில் நம்பிக்கை கொண்ட கட்சி என்ற வகையில் இத்தேர்தலைப் பயன்படுத்தத் தயங்கமாட்டோம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள பெரும் அநீதியாகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நாட்டு நடப்பு

### எண்ணை படுத்தும்பாடு

கிழவனார் பொல்லோடு ஓட
கிழவியும் பின்னால் ஓட
இளவலும் இவர்பின் ஓட
இளநங்கை தானும் ஓட
அயலவர் அறிந்து ஓட
அத்தெரு முழுதும் ஓட
வியப்புற்று நாய்கள் ஓட
ஓடினார் ஓடிச் சென்றார்
ஓடிப்போய் கியூவில் நின்றார்
கூடினார் ஆயிரம் பேர்
தப்பாது மண்எண்ணை இங்கு
தருவாராம் லீற்றர் மூன்று
எப்போது என்று கேட்டால்
இப்போ சொல்ல ஏலா தென்றார்.

*- விகடகவி.*

### தங்களின் நலன்களைப் பாதுகாக்கக் கோரி

# கோப்பாய், திருநெல்வேலி பகுதி சிறுவர் நடத்திய எழுச்சிப் பேரணி!

யாழ்ப்பாணம்,ஜன.29

குடாநாட்டுச் சிறுவர்களின் நலன்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் -

சிறுவர்கள் தொடர்பாகப் பெரியவர்களின் கடமைகளையும் - வலியுறுத்தி கோப்பாய் - திருநெல்வேலிப் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்கள் நேற்றுமுன்தினம் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கோப்பாய் மரியன்னை ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி திருநெல்வேலி சவேரியார் ஆலயமுன்றிலைச் சென்றடைந்தது.

கோப்பாய் - திருநெல்வேலிப் பகுதி ஆலய பங்குத்தந்தை அ.செலஸ்ரீன் (அ.ம.தி.) அடிகளாரின் வழிகாட்டலுடன் கோப்பாய் வடக்கு மரியன்னை ஆலயம், கோப்பாய் தெற்கு சூசையப்பர் ஆலயம், திருநெல்வேலி சவேரியார் ஆலயம் ஆகியவற்றின் திருப்பாலத்துவ சபைகளைச் சேர்ந்த சிறுவர்கள் இந்தப் பேரணியை நடத்தினர்.

எழுச்சிப் பேரணி தொடர்பாக அருட்தந்தை செலஸ்ரீன் அடிகள் கருத்துத் தெரிவித்தபோது:-

கடந்த 17 வருடங்களுக்கு மேலாகக் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் யுத்த அனர்த்தங்களால் சிறுவர்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன.

அண்மைக்காலமாக குடாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வருவதாக பத்திரிகைச் செய்திகள்மூலம் அறியமுடிகிறது. இதனால் அவர்களின் பாதுகாப்பு இன்று பெரும் கேள்விக்குறியாகி உள்ளது.

ஆகவே அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்தும் நோக்குடனேயே இந்த எழுச்சிப் பேரணியை சிறுவர்கள் நடத்தியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

சிறுவர் நலன்காப்பு எழுச்சிப் பேரணியில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

பேரணியில் தாங்கிச் செல்லப்பட்ட சுலோக அட்டைகளில், -

- போரிலே பிறந்தோம்; போரிலே வளர்ந்தோம். போர் வேண்டாம்.
- கல்வியும் ஒழுக்கமும் எமது இரு கண்கள்.
- உணவு, உடை, உறையுள் இவை மட்டும் எமக்குப் போதுமா? எம்மை வாழ, வளர வழியைக் காட்டுங்கள்.
- உங்கள் செல்வங்கள் நாம்; எம்மோடு வல்லுறவு வேண்டாம்.

ஆகிய வாசகங்கள் காணப்பட்டன.

திருப்பாலத்துவ சபைச் சிறுவர்களின் விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் காலை 7.15 மணிக்கு சிறப்புத் திருப்பலியும் பகல் 10 மணிக்கு சிறுவர்களுக்கான கருத்தரங்கும் விளையாட்டு நிகழ்வுகளும் கோப்பாய் மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-6-180)

# எப்போது வேண்டுமானாலும் மக்களைச் சந்திக்கத்தயார்!

### யாழ்.மேயர் கந்தையன் கூறுகிறார்

யாழ்.மக்களுக்கு இயன்றளவு சேவையாற்றுவதற்காகவே தான் முதல்வர் பதவியை ஏற்றுள்ளதாகவும் -

ஆகவே தமது முறைப்பாடுகள், குறைகள் தொடர்பாக எந்த நாளிலும் 24 மணித்தியாலங்களும் பொது மக்கள் தன்னுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் -

யாழ்.மாநகர புதிய முதல்வர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார்.

தன்னை நேரடியாகச் சந்திக்க முடியாதவர்கள் 3651 மற்றும் 2275 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளும்படியும் -

தன்னிடம் முறையிடப்படும் குறைகளை முடிந்தவரை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் -

அவர் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாநகராட்சி பெரும் நிதி நெருக்கடியில் உள்ளபோதும், இருப்பதை வைத்து திறமையுடன் சேவையாற்ற தான் உறுதிபூண்டுள்ளதாக முதல்வர் கூறியுள்ளார்.

இதுவரை தனது பாவனைக்கென்று வாகனம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் -

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் இது தொடர்பாக முறையிட்டுள்ளதாகவும் -

அவர் தெரிவித்தார். (ஒ-ரி)

# நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தை திறக்கக் கோரி அமைச்சருக்குக் கடிதம்

வடமராட்சி கிழக்கு,ஜன.29

நாகர்கோயிலில் நாகதம்பிரான் ஆலயத்தை மீண்டும் திறந்து பூசைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை செய்துதரும்படி வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனைக் கோரியுள்ளது.

வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் இது தொடர்பாக அமைச்சருக்குக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

அமைச்சரின் தலைமையிலோ அல்லது மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தலைமையிலோ ஆலய பரிபாலன சபையினர் முதலில் ஆலயத்தைச் சென்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்துதரும்படியும் -


அப்பகுதி மக்கள் தமது வீடுகளில கைவிட்டு வந்த பொருள்களை மீட்டுவர உதவும்படியும் - அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-182)

### நாளை

தை 17
புதன்கிழமை
(30-01-2002)
திதி : துதியை
நள்ளிரவு 12.48 வரை.
நட்சத்திரம் : மகம்
வைகறை 5.00 வரை.
கரிநாள்
சுபநேரம் : 5.06 - 6.36
ராகுகாலம் : 12.36 - 2.06
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு புத்தகம் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.



திருநெல்வேலி ஆடியபாத வீதியில் ஸ்ரீ இராமகிருஷ்ண ஆலயத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலையையே படத்தில் காண்கிறீர்கள். இந்தச் சிலை கடந்த சனி இரவு இனந்தெரியாதோரால் கற்கள் மற்றும் வெற்றுப் போத்தல்கள் வீசி உடைக்கப்பட்டிருக்கிறது. சிலையைச் சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த கண்ணாடிக் கூண்டு நொறுங்கி உள்ளது. *(படங்கள்:பொ.இராஜேஸ்வரன்)*







• 60 சிசி 2 ஸ்ட்ரோக் என்ஜின்
• கிக் மற்றும் ஸ்செல்வ் ஸ்டாட்டர்




• 125 சிசி 2 ஸ்ட்ரோக் என்ஜின்
• ஸ்செல்வ் ஸ்டாட்டர்




• 74 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்
• சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ




• 100 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




• 111.6 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




• 110 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா, சிக்கனமா, அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். அத்துடன் கீழ் காணப்படும் வியாபாரிகளிடம் நீங்கள் எமது அனைத்துவகை பஜாஜ் மோட்டார் சைக்கள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோர்ணர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** எஸ்.யசோதரன், எ-16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2798
எம்.பி.சி.எஸ். யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2587
குரான்சி ட்ரேடர்ஸ், இல.6, 1ஆம் மாடி, மொடன் மாக்கட், கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

# தனது அதிகாரங்களை இன்னமும் முற்றாக பயன்படுத்தவில்லை என்கிறார் ஜனாதிபதி

புத்தளம்,ஜன.29

"முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஏற்படுத்திய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் அதிகாரங்களில் 25சதவீதமானவற்றையே இதுவரை அமுல் செய்திருக்கின்றேன். மிகுதி அதிகாரங்களைப் பயன்படுத்த நான் இதுவரை எண்ணியது கிடையாது...."

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா கூறினார்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளைப் புனரமைப்பது தொடர்பான கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஜனாதிபதி உரையாற்றினார்.

முன்னாள் அமைச்சரான மில்ரோய் பெர்னாண்டோ எம்.பி. தலைமையில் கடந்த சனியன்று வென்னப்புவ நகரில் இக்கூட்டம் நடைபெறும்.

ஜனாதிபதி குமாரதுங்கா மேலும் கூறியதாவது:-

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்லின்போது புத்தளம் மாவட்டத்தில் பல அநியாயங்கள் இடம்பெற்றதை அறிவேன். எமது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர். இவை தொடர்பான விரிவான விசாரணைகள் இன்னும் நடைபெறவில்லை.

பொதுத் தேர்தல் முடிவுகளின்படி பொ.ஐ.முன்னணியோ, ஸ்ரீல.சு. கட்சியோ அழிந்து போய்விடவில்லை. சிறிது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அந்தப் பின்னடைவு சீர் செய்யப்பட்டு பொ.ஐ.மு. மீண்டும் மக்கள் ஆதரவைப் பெறும் என்பது உறுதியாகும்.

நாட்டு மக்களில் 38 சதவீதத்தினர் பொ.ஐ.முன்னணியை ஆதரித்தனர். ஜே.வி.பிக்குக் கிடைத்த வாக்குகளையும் சேர்த்தால் எமக்கே பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

எமக்கு ஏற்பட்ட பின்னடைவால் முனனொரு போதுமில்லாத வகையில் எமது கட்சி புதுத்தெம்புடன் வளர ஆரம்பித்துள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

(ஐ)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 15 – 07 – 1916



இறைவன் அடியில் 31 – 12 – 2001

அமரர்

### செல்லையா கணபதிப்பிள்ளை

(செட்டியவூர் - தொண்டமனாறு)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00மணியளவில் தொண்டமனாறு சந்நிதியிலுள்ள வைரவர் கோயிலுக்கு அருகில் நடைபெறும். அன்றையதினம் சந்நிதி ஆச்சிரமத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் நாளை (30.01.2002) புதன்கிழமை குமரகோட்ட, கோண்டாவிலில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்போதைய முகவரி:-* க.சரஸ்வதி *(மனைவி)*

*செட்டியவூர், தொண்டமனாறு.* *(028) 'குமரகோட்டம்', கோண்டாவில்.* திரு.திருமதி தர்மகுலசிங்கம் *(இராசா)*

## இரண்டாவது ஆண்டு நினைவலைகள்

*மண்ணில்* 06 – 05 – 1908



*இறை மகிமைக்குள்* 29 – 01 – 2000

### திருமதி மேரி அமிர்தம்மா (B)பக்கஸ் (மேரி அக்கா)

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)*

**"கத்தருடைய பரிசுத்தவாக்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"**

அன்புடன் நினைவுகூரும்:
தியாகராஜா சரஸ்வதி,
குமரேசு கமலாதேவி,
கந்தையா நாகம்மா, பேறாமக்கள்.

*வெஸ்லி லேன், கல்லூரி வீதி, பருத்தித்துறை.* (97588)

## நீங்காத நினைவுகளில் மூன்றாண்டுகள்

அன்னை மடியில் 1948 - 01 - 19



ஆண்டவன் அடியில் 1999 - 02 - 01

### அமரர் வியாகேசு யோகராஜா

*(ஆசிரியர், கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம், வானம்பாடி வில்லிசை புகழ் நாயகன், வானம்பாடி யோகராஜ்)*

**திதி: பிரதமை 29.01.2002**

பாங்காக எமை வளர்த்த பாச ஒளியே! எமை
ஏங்கியே தவிக்கவிட்டு எங்கு சென்றீரப்பா?
நீங்காத துயர் தந்த எமை விட்டுப் பிரிந்த - உம்
ஓங்கிய அன்புமுகம் எமை விட்டு அகலவில்லை!
இன்றும் என்றும் உம் நினைவுகளுடன்.....

*உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல*
*சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
திருமதி யோ.இராஜேஸ்வரி (மனைவி)
பிள்ளைகள்: யோ.தினேஷ்குமார்
யோ.ஷம்ஷாநந்தி.

*கிளவிதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (97542)

## வடமராட்சி கடலில் வெடியோசை

சாவகச்சேரி,ஜன.29

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் பீரங்கி வெடியோசைகள் சுமார் 5 நிமிட நேரம் கேட்டதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள சமயத்தில் கேட்ட இந்த வெடியோசைகளால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியதாகவும் -

கடற்பரப்பில் தென்பட்ட ஏதாவது நடமாட்டம் அல்லது இந்திய மீன்பிடிப்படகுகள் காரணமாக தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் - கூறப்படுகிறது.

(ஒ-31)

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய கற்கை நெறி

நிந்தவூர்,ஜன.29

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா (பத்திரிகைத்துறை டிப்ளோமா) கற்கைநெறி ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

ஊடகத்துறை சார்ந்த பல்வேறு அமைப்புக்களும் இந்தக் கற்கை நெறியை ஆரம்பிக்குமாறு உபவேந்தர் எம்.எல்.ஏ.காதரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கற்கை நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி நடைபெறும் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ.என். ஜெனபர்சாதிக் தெரிவித்தார்.

(ஐ)

## 10 அடி நீளச் சுறா கொட்டடியில் விற்பனை

சாவகச்சேரி,ஜன.29

யாழ்ப்பாணம் கொட்டடி மீன் சந்தையில் சுமார் 10 அடி நீளமான சுறா மீன் ஒன்று வடமராட்சி மீனவர்களால் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டது.

பருத்தித்துறை கற்கோவளப் பகுதியில் இந்தச் சுறா மீன் பிடிக்கப்பட்டதாகவும் -

அது 18 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ஒ-31)

## வாசகர் திருமுகம்

### நஷ்டஈடு தர அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

காலபோகத்தை அடுத்து காரைநகர் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில செய்கைபண்ணப்பட்ட நெற்பயிர்கள் பெருமளவில் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் மேற்படிபகுதிகளில் பயிர்ச செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

கட்டாக்காலி கால்நடைகளின் அச்சுறுத்தல் கட்டுப்படுத்தப்படும் என உதவி அரசாங்க அதிபர், விவசாய சம்மேளனங்கள் மற்றும் கிராம அலுவலர்கள், பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் அளித்த உத்தரவாதத்தின் பேரிலேயே நாம் பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டோம். ஆனால் கால்நடைகள் பயிர்களை அழித்துவிட்டன.

எனவே, பயிர் அழிவதனால் பாதிப்படைந்துள்ள எமக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். இது குறித்து பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*காரைநகர்.* பாதிக்கப்பட்ட ஒரு விவசாயி.

### பொலீஸார் உறங்குவது ஏன்?

தற்போது கல்வியங்காட்டுப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. குறித்த சில நாள்களுக்குள் கல்வியங்காட்டுச் சந்தையில் அமைந்துள்ள சங்கக்கடை உடைக்கப்பட்டு, பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் நடந்து ஓரிரு தினங்களில் சந்தைக்கு நேரே ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஒரு கடை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, இப்பகுதியில் உள்ள வீடுகளிலும் பொருள்கள் திருட்டுப்போவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. ஆளுக்கு ஆள அடிபடுவது, வெட்டுப்படுவது போன்ற சம்பவங்களும் இங்கு அடிக்கடி இடம்பெறுகின்றன. களவு, வெட்டுக்கொத்து மட்டுமல்ல, கசிப்பு வியாபாரமும் இங்குள்ள சில இடங்களில் தடையின்றி நடைபெறுகின்றன.

இச்சம்பவங்கள் குறித்து பல தடவைகள் பொலீஸாரிடம் முறையிட்டும் தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. கல்வியங்காடு என்ன 'ரவுடி'கள் சாம்ராஜ்ஜியமா?

உரிய அதிகாரிகள் இதைக் கவனத்தில் கொள்ளுவார்களா?

*கல்வியங்காடு.* எஸ்.சிந்துதாசன்.

### பரீட்சை முடிவுகள் என்னவாகின்றன?

பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை. இந்தப் பரீட்சைக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் தோற்றியிருந்தனர்.

பரீட்சைத் திணைக்களத்தின் சட்டங்களை மதித்து, அதற்குரிய பணம செலுத்தி நடத்தப்பட்ட பரீட்சைக்கு என்ன நடந்தது? பரீட்சை முடிவு வெளிவராவிட்டால் அல்லது அப்பரீட்சை இரத்துச் செய்யப்பட்டால் அதற்குரிய பணம் மீளளிக்கப்படுவது வழமை. ஆனால் இந்தப் பரீட்சை குறித்து இதுவரை எதுவுமே நடக்கவில்லை.

இது இவ்வாறிருக்க, 2001 டிசெம்பர் பரீட்சை நடப்பதாக அறிவிக்கப்பட்ட கல்வி நிர்வாக சேவை பரீட்சை குறித்தும் இதுவரை எந்தவிதமான தகவலும் இல்லை.

இப்பரீட்சைகளுக்குத் தோற்றியவர்கள் - விண்ணப்பித்தவர்கள் அனைவரும் ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்தவர்களே. இவர்களது பிரச்சினைகளை பிரதிநிதிகளாக நின்று கேட்கும்பொறுப்புடையவர்கள் ஆசிரிய சங்கத்தினரே. ஏன்? இவர்கள் இதைக் கேட்கவில்லை.

கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலர் SLEAS இல்லாமல் கடமையில் இருப்பதும், இருப்பவர்களுக்குப் போட்டிப் பரீட்சையே இல்லாமல் பதவி உயர்வு வருவதும் எப்படி? இதுபற்றி பரீட்சை ஆணையாளர் நாயகம் யாழ்ப்பாணம் வந்தபோது யாராவது கேட்டார்களா? அல்லது தரம எடுத்தவர்கள் விருந்துவைத்ததோடு விட்டார்களா? அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளியாகி நேர்முகப் பரீட்சைகளும் முடிந்துவிட்டன. ஆனால் இதுகுறித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

*நல்லூர்.* சரா.

### என்று தீரும் இந்த அவலம்?

1999ஆம் ஆண்டு மேமாதம் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும், வெளிமாவட்டங்களிலும் குடியிருக்கும் மக்கள் 2001 மேமாதம் தொடக்கம் தங்கள் இருப்பிடங்களைப் பார்வையிட உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவ்வனுமதி வழங்கப்படும் முன்பே நாளாந்தம் நெஞ்சுரத்துடன் தென்மராட்சியின் பல பகுதிகளுக்கும் பலர் சென்று பலரின் வீடுகளிலிருந்த பொருள்களை அபகரித்தமை பலரும் அறிந்ததே.

2001 மேமாதம் அனுமதி வழங்கப்பட்ட பின் எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் பெண்களும், ஆண்களும், பிள்ளைகளுமாகத் தத்தம் வீடுகளுக்குச்சென்று தம் காணிகளைத் துப்புரவு செய்துவிட்டு வருகின்றனர். இவ்வாறு மக்கள் செல்லாத நாள்களில் அடுத்தவர்கள் வீடுகளிலும், காணிகளிலும் உள்ள திடகாத்திரமான மரங்களையும், எஞ்சியிருக்கும் சில்லறைப் பொருள்களையும், தேங்காய்களையும் அபகரிப்பது இன்றும் நடக்கிறது.

இந்தவேளையில் ஆண்களுடன், பெண்களும் சரிசமமாகப் பிரயாசைப்பட்டுத் தம் வீடுவாசல்களை, காணிகளைத் துப்புரவு செய்துவருவதுடன், கையிலே கொண்டுசெல்லக்கூடிய விறகுகளையும் பஸ்ஸிலோ, துவிச்சக்கர வண்டி மூலமோ, மோட்டார் சைக்கிள் மூலமோ கொண்டுசென்று தம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கின்றனர். ஆனால் துப்புரவாக்கி விடும் காணியில் எதுவித கூச்சமும் இன்றி நுழைந்து வீட்டிலே எஞ்சி இருக்கும் மண்சட்டியைக்கூடக் கொண்டுசெல்லும் எமது அயலவர்கள் - ஊரவர்கள் - உறவினர்கள் இராணுவத்தின் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு மாபெரும் கள்ள (விறகு) வியாபாரம் நடத்துவதற்காகப் பயன்தரு மரங்களை அடியோடு வெட்டிப் பச்சை மரமாகவே கடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

வீட்டுச் சொந்தக்காரர்கள் செல்லாத நாள்களில் வீட்டுக்குப் பாதுகாப்பாகவும், வேலிக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும் பலமான கதியால்கள் வெட்டிக் குறுக்கி விறகாகக் கொண்டு செல்லப்படுகின்றன. சில இடங்களில் வீட்டுத் தீராந்திகள், உரல்கள்கூட விறகுக்காகப் பிளக்கப்பட்டு கொண்டுசென்று விற்கப்படுகின்றன.

இந்த இடத்தில், "எமக்கு என்ன பிழைப்பு? இப்படியாவது சீவிப்போம். நாம் என்ன மாதச் சம்பளமா பெறுகின்றோம்?" என்று சிலர் முணுமுணுப்பது காதில் விழுகிறது. அக்கேள்வி ஒரு நியாயமான கேள்விதான்? அன்றாடம் கூலிவேலைக்குச் செல்பவர்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் அலைவது உண்மைதான். ஆனால் இவர்கள் பற்றையாக மண்டியிருக்கும் பாதைகளில் - ஒழுங்கைகளில் வீழ்ந்து சிதறிக்கிடக்கும் மரங்களை வெட்டி எடுத்தால் பாதையாவது துப்புரவாகுமே! ஆனால் எமது விற்பன்னர்கள் ஆளரவம் கேட்காத நாள்களில், அடுத்தவர் துணையில்லாத அப்பாவி மக்களின் வீடுகளுக்குச் சென்று நாளாந்தம் கள்ள விறகு வியாபாரம் அல்லவா நடத்துகிறார்கள்? இவர்கள் அந்த வீட்டுக்கு அயலவரும், ஊரவரும், உறவினர்களுமே. ஏனைய்யா! அந்த வீட்டுக்கும் வீட்டுக்காரருக்கும் விறகும், வேலியும், நிழல் மரங்களும், தேங்காய்களுமே தேவைதானே!

*சாவகச்சேரி.* நா.சி.செல்வி.

# சமாதானத்திற்கான கடைசி வாய்ப்பு

## அமைச்சர் ஜயலத் பேட்டி

**அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தனது யாழ். விஜயம் குறித்தும், சமாதான நடவடிக்கைகள் குறித்தும் "சிலுமின" வார இதழுக்குப் பேட்டி வழங்கியிருந்தார். அந்தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

*கேள்வி:* வடக்கையும், தெற்கையும் இணைப்பதும் சமாதானத்தை உருவாக்குவதும் இன்று நாட்டின் இன்றியமையாத தேவைகள் ஆகும். இவ்வேளையில், நீங்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்தீர்கள். உங்களது யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் என்ன?

*பதில்:* 1996 இன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த முதல் சிங்கள அமைச்சர் நானே. தைப்பொங்கல் திருநாளை ஒட்டியே எனது பயணம் முக்கியமாக அமைந்தது. தைப்பொங்கல் இந்துக்களின் முக்கிய சமய நிகழ்வாகும். இத்தினத்தில் விவசாயிகள் புதுக் கதிர் எடுத்து சூரிய பகவானுக்கு பொங்கிப் படைப்பர். இம்முறை தைப்பொங்கல் திருநாள் வெகு விமர்சையாக இந்துக்களால் கொண்டாடப்பட்டது. அன்று யாழ்ப்பாண மக்கள் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். துப்பாக்கிகளின் ஓசைகள் ஓய்ந்திருந்த வேளையில் தென்பகுதி மக்களின் பிரதிநிதியாக யாழ்ப்பாண மக்களுக்கு நட்புறவையும் நல்லெண்ணத்தையும் நான் எடுத்துச்சென்றேன்.

*கேள்வி:* நீங்கள் இந்தப் பயணத்தின்போது யாழ்.பொதுமக்களையும் சந்தித்தீர்கள். அந்தப் பொதுமக்கள் உங்களிடம் என்ன கூறினர்?

*பதில்:* நான் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்களே தங்கியிருந்தேன். அம்மக்கள் என்னை அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்றனர். 20 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் யுத்தத்தால் யாழ்.மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் - துன்பங்கள் எண்ணிலடங்கா. இந்த யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் யாழ்.மக்களின் விவசாயப் பொருள்கள், கடற்பொருள்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. நாட்டின் உணவுத் தேவையின் குறிப்பிடத்தக்களவு சதவீதத்துடன் யாழ். மக்கள் தொடர்புகொண்டிருந்தனர்.

தங்களது மீன்பிடி மற்றும் விவசாய உற்பத்திகளைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு எப்படியேனும் யாழ். -கண்டி வீதியைத் திறந்துவிடுமாறு யாழ். விவசாயிகள், மீனவர்கள் என்னிடம் கோரினர். கொழும்பில் வீதித்தடைகள் அகற்றப்பட்டு, பல வீதிகள் திறக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளிலும் செய்தியூடகங்கள் மூலமாகவும் தாங்கள் அறிந்ததாக அம்மக்கள் எடுத்துக் கூறினர். அவ்வாறான சூழ்நிலையை அனுபவிக்கும் சுதந்திரத்தை தங்களுக்கும் உருவாக்கித் தருமாறு அவர்கள் கோரினர்.

*கேள்வி:* யாழ்ப்பாண மக்களின் உள்ளங்கள் மாத்திரமன்றி அவர்களது இல்லங்களும் சிதைவடைந்துள்ளன. துப்பாக்கிச் சன்னங்கள் துளைக்காத வீடுகளை யாழ்ப்பாணத்தில் காண்பதரிது. அவ்வளவு தூரத்திற்கு யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தின் பலாபலனை எதிர்நோக்கியுள்ளனரே.

*பதில்:* இவை அனைத்திற்கும் மத்தியில் யாழ்ப்பாண மக்களின் ஆத்மசக்தியை நான் கண்டேன். அழிக்கப்பட்ட வீடுவாசல்கள், பாதைகள், பொது இடங்கள் அனைத்தையும் நான் கண்ணுற்றேன். யாழ். நூல்நிலையத்தை நான் பார்க்கச் சென்றேன். சாவகச்சேரி நகரம் முற்றிலுமாகத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இன்றும் அப்பகுதியில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். அவற்றை அகற்றுமாறு மக்கள் என்னிடம் கோரினர். ஐ.நாவின் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் திட்டத்தின் கீழாவது அங்குள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றவேண்டியுள்ளது.

வானளவுக்கு உயர்ந்துள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டும் என்பதே வடபகுதி மக்களின் மிக முக்கியமான கோரிக்கையாகும். மண்ணெண்ணெய், சீனி, அரிசி, கிழங்கு ஆகியனவற்றின் விலைகளைக் குறைக்குமாறு அவர்கள் குறிப்பாகக்கோரினர்.

பருத்தித்துறையிலுள்ள இறங்குதுறையைப் பார்வையிடச் சென்றேன். அங்குள்ள மருந்தகத்தைத் திறப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைதடியிலுள்ள வயோதிபர் இல்லத்திற்கான அத்திவாரக்கல் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவால் நாட்டப்பட்டது எனவும், 26.01.1954 இல் அக்கட்டம் முன்னாள பிரதமர் சேர் ஜோன்.கொத்தலாவலயால் திறக்கப்பட்டது எனவும் அங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்லில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வயோதிபர் இல்லத்தை எனது அமைச்சிற்கான நிதியைப் பயன்படுத்தி மீள அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளேன். இந்த ஜனவரி 26ஆம் திகதி மீண்டும் அந்த வயோதிபர் இல்லத்தை அமைத்துத் திறந்துவைக்குமாறு அங்குள்ள அதிகாரிகளைப் பணித்துள்ளேன்.

கைதடியிலுள்ள சித்த ஆயுர்வேத மருத்துவமனையைத் திருத்தும் ஆரம்ப வேலைகள் முடிவடைந்துள்ளன. பருத்தித்துறைத் துறைமுகத்தில் தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள் சிமெந்து போன்ற பொருள்களை இறக்கும் போது எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்கும்பொருட்டு பாதுகாப்பு முகமூடி வழங்குமாறு கோரினர். என்னுடன் விஜயம் செய்த ஜேர்மன் தூதரகப் பிரதித் தூதுவர் அவ்வாறான முகமூடியை வழங்குவதற்கு இணங்கியுள்ளார்.

யாழப்பாணக் கச்சேரியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் பிரதிநிதிகள், அரச திணைக்கள, கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோரை அழைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடத்தினேன். அரசின் அமைச்சர் என்ற விதத்தில் நான் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்க சம்பவமாகும். அரச அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், யாழ் நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியன குறித்துக் கலந்துரையாடப்பட்டது. யாழ். மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்திததேன். தங்கள் தொழிலை மேற்கொள்ள வசதியாக அவர்கள் கடன் வசதிகள் மற்றும் உதவிகளைக் கோரினர்.

அந்த மீனவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் நேரத்தை 2 மணித்தியாலங்களால் அதிகரிக்க வழி ஏற்பட்டது. தற்போது அனுமதிக்கப்பட்ட 500 மீற்றர் தூரத்தை 750 மீற்றராகவும், 750 மீற்றர் தூரத்தை 1000 மீற்றராகவும், 1000 மீற்றர் தூரத்தை 1250 மீற்றர் தூரமாகவும் அதிகரிக்க அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

*கேள்வி:* தற்போது நோர்வே அரசின் ஒத்துழைப்புடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அனைவரும் அறிவர். சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுமுன்னரே ஜே.வி.பி. போன்ற கட்சிகள அதுகுறித்து விமர்சித்து, நாடெங்கும் போஸ்டர்கள் ஒட்டுகின்றன. இந்நிலைமை குறித்துத் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* இந்தப் பிரச்சினை இன்று நேற்று ஆரம்பமானது அல்ல. இது நூல்பந்துபோல் சிக்கல் நிறைந்தது. இந்தச் சிக்கல்களை நீக்கி, நாங்கள் தற்போதாவது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். இந்தப் பிரச்சினை காரணமாக இதுவரை எத்தனை உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. எத்தனை சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பதை நான் கூறித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பை நாம் ஒருபோதும் தாரைவார்த்து வழங்க மாட்டோம் என்பதை நான் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன். நாடு துண்டாடப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. முன்வைக்கப்படும் தீர்வானது இன்று அல்ல எதிர்காலத்திலும் நாடு துண்டாடப்படுவதை அனுமதிக்காது. ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் சகோதரர்கள்போல் வாழ சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். பருத்தித்துறையில் இருந்து "டொன்றா" முனை வரை தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகியோர் தாம் விரும்பும் இடத்தில் வாழும் உரிமை வழங்கப்படவேண்டும்.

*கேள்வி:* நான் குறிப்பிட்டது சமாதான முயற்சிகள் ஆரம்பமாகும் முன்னரே அதை முடக்குவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதே.

*பதில்:* யுத்தத்தை வியாபாரமாக்கியவர்கள், யுத்தத்தால் வாழ்பவர்கள், யுத்தத்தால் 'கொமிஷன்' பெறுபவர்கள் ஆகியோர் மட்டுமே எமது சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

நாம் மேற்கொள்ளவிருக்கும் சமாதான முயற்சிகளை ஈடேற்ற எத்தனையோ மேடு பள்ளங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அறிவோம். எமது பயணம் எவ்வளவு கடினமாய் இருப்பினும் அனைத்து மக்களின் நலன்கருதி அந்தப் பயணத்தைத் தொடரவே வேண்டும்.

எவர் எவ்விதத்தில் தடைகளைப் போட முற்படினும் இந்த அரசுக்கு இந்நாட்டு மக்கள், இந்நாடு எதிர்நோககும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகளைக்காணும் அதிகாரத்தை வழங்கியுள்ளனர். இந்த மக்களின் வேண்டுகோளை - இந்த அபிலாஷைகளை - எமக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆணைமூலம் நாம் நிறைவேற்ற வேண்டும். இந்தப் பொறுப்பை நாம் நேர்மையுடனும் உளத்தூய்மையுடனும் நிறைவேற்றுவோம்.

*கேள்வி:* வடக்கிற்கான பிரதான பாதையைத் திறப்பதுபற்றி - வடக்கிற்கான விநியோக வழியை உருவாக்குவதுபற்றி - நீங்கள் விடயங்களை முன்வைத்தீர்கள் யாழ். - கண்டி வீதி விரைவில் திறக்கப்படுமா?

*பதில்:* எனது தனிப்பட்ட எண்ணத்தின்படி வடபகுதிக்கான பாதையைத் திறப்பதாயின் சமாதானப் பேச்சுக்களில் தொடர்புடைய இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டிற்கு வருதல் வேண்டும். இன்றுள்ள நிலைமைகளின்படி சமாதான முயற்சிகளை மிக நுணுக்கமாக - மிகப் பொறுப்புடன் - மேற்கொள்ளவேண்டும். நாங்கள் பிரயோகிக்கும் தவறான ஒரு சொல் அல்லது தவறான ஒரு நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

மிகவும் கவனத்துடன் ஆராய்ந்து நாம் மேற்கொள்ளும் முடிவு குறித்து வடபகுதியினர் ஒரு கருத்தையும், தென்பகுதியினர் ஒரு கருத்தையும் வெளியிடாத வகையில் எமது பணி அமையவேண்டும்.

நாம் 1994இல் ஆட்சி அதிகாரத்தை இழந்தோம். அன்று தொடக்கம் எம் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நாம் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தோம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதே அந்த நிலைப்பாடாகும். தேர்தலுக்கு முன்னரும், பின்னரும், தேர்தல் நடவடிக்கைகளின் போதும் நாம் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தோம். இன்றும் எமது எண்ணங்களில் எதுவித மாற்றமும் இல்லை.

*கேள்வி:* தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்தம் தொடருந்தும் நீடிக்குமா?

*பதில்:* மோதல்தவிர்ப்பு நிலை இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்கப்படும் என நான் நினைக்கிறேன். தற்போது எமது பொறுப்பு - நாட்டைப் பற்றிய உணர்வுகொண்ட சகல பிரஜைகளை உருவாக்குவது மற்றும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே ஆகும்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்புமீது விதிக்கப்பட்ட தடை கட்டாயமாக நீக்கப்படவேண்டும் எனத் தமிழ்ச்செல்வன் வன்னியில் தெரிவித்துள்ளார். அரசு, புலிகள் மீதான தடையை நீக்குமா?

*பதில்:* புலிகளின மீதான தடையை நீக்குவது குறித்த முடிவை மிகவும் பொறுப்புடன் மேற்கொள்ளவேண்டும். இது குறித்து தனிப்பட்ட விதத்தில் என்னால் அபிப்பிராயம் கூறமுடியாது. இது தனிப்பட்ட கருத்தை வெளியிடக்கூடிய தனிப்பட்ட பிரச்சினை அல்ல. இது தேசிய பிரச்சினை. தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண தேசிய முடிவை மேற்கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றங்களை அடுத்து சிலசில முடிவுகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உருவாகும் என நான் நினைக்கிறேன்.

நான் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகிறேன. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இந்த அரசு எந்தவோர் இனத்திற்கும் அநீதியாக நடகக மாட்டாது. பாதுகாப்பு வழங்காமலும் விடாது. நாடு துண்டாடப்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

*கேள்வி:* யாழ்ப்பாணத்திலுள்ள வீதித்தடைகளை அகற்றுமாறு அங்குள்ள மக்கள் கோரினர் என நீங்கள தெரிவித்தீகள். இன்று நாட்டில் வீதித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன. அல்லது அகற்றப்பட்டுவருகின்றன. இது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என எதிரணியினர் எழுப்பும் குற்றச்சாட்டுக்கள் குறித்து என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* வீதித்தடைகளை அகற்றுவது தொடர்பாக அரசு மிகக் கவனத்துடனேயே நடவடிக்கை எடுத்தது. உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பாக உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்ததில் இருந்து பிரதமர் உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பாக எவ்வளவுதூரம் அக்கறை எடுக்கிறார் என்பது தெளிவாகிறது. ஏனோதானோ என்ற விதத்தில் வீதித்தடைகள் அகற்றப்படவில்லை. எந்தவிதத்திலும் நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அக்கறைகொள்ளாமல்விட நாம் தயாரில்லை.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் எப்போதும் யுத்தநிறுத்த காலத்தைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு பாரிய தாககுதலுக்குத் தயாராகிறார்கள் - திட்டமிடுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். எம்மில் பலருக்கு அந்த நம்பிக்கையே உண்டு. தற்போது வடக்கிற்குப் பொருள்களை அனுப்பும் தடை நீக்கப்பட்டதும், அங்கு அனுப்பப்படும் சிமெந்து, இரும்புக் கம்பி ஆகியனவற்றைப் பயன்படுத்தி புலிகள் புதிய காப்பரண்களை அமைக்கக்கூடும் எனச் சிலர் அச்சம் தெரிவித்துள்ளனரே.

*பதில்:* சமாதானம் ஏற்படவேண்டுமாயின் இரு தரப்பினருக்குமிடையே அன்னியோன்னிய நம்பிக்கை உருவாக வேண்டும். கடந்தகால துர்அனுபவங்களை மறந்து, எதிர்கால சுப எதிர்பார்ப்புகளுடன், நேர்மையுடன் நாடு பற்றிச் சிந்தித்து இந்தக் கடினமான பயணத்தை மேற்கொள்ளவேண்டும். வன்னிக்குச் சிமெந்து அனுப்பப்பட்டது அந்தந்த மாவட்டச் செயலாளர்களின் சிபார்சின் அடிப்படையிலேயே ஆகும்.

எனவே அங்கு அனுப்பப்படும சிமெந்தைப் பயன்படுத்தி காப்பரண்கள் அமைக்கவாய்ப்பில்லை. மிகவும கவனமாகச் சிந்தித்த பின்னரே வடபகுதிக்குப் பொருள்களை அனுபபும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த பொதுத் தேர்தலின் முடிவின் படி 77 வீதமான மக்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கியுளளனர். எனக்குத் தெரியும்விதத்தில் இது சமாதானத்தை உருவாக்கக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பம் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் கைநழுவவிடக்கூடாது. ☆

**தமிழில்: கஜனி**

---

# கட்டாக்காலிகளைப் பிடிக்க யாழ்.மாநகரசபை நடவடிக்கை

## மேயர் கந்தையன் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரிந்து பயிர்களுக்கு நாசம்விளைவிக்கும் ஆடு, மாடுகள் மாநகரசபையினரால் பிடிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் இதனை அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் தட்டுப்பாடான இந்தக் காலப்பகுதியில் மக்கள் சிரமப்பட்டு மேற்கொள்ளும் பயிர்ச் செய்கைக்குக் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பெருஞ்சேதத்தினை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றின் அழிவு வேலைகள் குறித்துப் பல முறைப்பாடுகள் எழுத்துமூலமாகவும், நேரடியாகவும் தரப்பட்டுள்ளன.

எனவே, அடுத்தமாத ஆரம்பம் முதல் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடுகளை மாநகரசபையினர் பிடிக்கவிருக்கிறார்கள். அவ்வாறு பிடிக்கப்படும் ஆடு, மாடுகளை மீளப் பெறவேண்டுமாயின் உரியவர்கள் தண்டப்பணம் செலுத்த நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-ரி)

# பிரதேச சபை தலைவர் காயம்

தென்மராட்சி,ஜன.29

மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கடந்த புதன்கிழமை மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

(ம-117)


**பாராட்டி வாழ்த்துகிறோம்**

எமது பாடசாலை இசை ஆசிரியை

**திருமதி ஞானகுமாரி சிவநேசன்**

*அவர்கள் 2001ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலைஞானகேசரி" எனும் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையை பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
(017) யா/இராமநாதன் கல்லூரி.



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2002**

*தலைவர்:* திரு.ச.சிவநேஸ்வரன்

*இடம்:* கல்லூரி மைதானம்

*காலம்:* 30.01.2002 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி.

*பிரதம விருந்தினர்:* திரு.க.தனபாலசிங்கம் அவர்கள்
*(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)*

*சிறப்பு விருந்தினர்:* திரு.வி.பாலசிங்கம் அவர்கள்
*[உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வலிகாமம் வலயம்]*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.

(041)

### சாரதி 'லைசென்ஸ்' வழங்குவதில் தேக்கம்

# மோட்டார் வாகனப் பரிசோதகர் இன்றி திண்டாடி வருகிறது திணைக்களம்!

யாழ்ப்பாணம்,ஜன.29

குடாநாட்டில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிலையில் உள்ளபோதிலும், இங்கு மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர்கூட நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை.

- இவ்வாறு மோட்டார் திணைக்கள வட்டாரத்தினர் விசனம் தெரிவித்தனர். இதுதொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

குடாநாட்டில் 1989ஆம் ஆண்டுக்கு முன்னர் மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் இருவர் நிரந்தர நியமனம் செய்யப்பட்டிருந்தனர். போர்ச் சூழல் காரணமாக எமது அலுவலகம் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டுவரை இயங்காமல் இருந்தது.

மீண்டும் 1996இல் இயங்க ஆரம்பித்த எமது அலுவலகத்திற்கு இன்றுவரை நிரந்தர மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை. இதனால் குடாநாட்டில் வாகன சாரதிகள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அண்மைக்காலமாக பொலீஸார் சாரதி அனுமதிப்பத்திரங்களை சோதனையிட்டு வருவதால் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

நாடு முழுவதிலும் ஏறக்குறைய 56 பேர் மோட்டார் வாகனப் பரிசோதகர்களாகக் கடமையாற்றுகின்றனர். இவர்களில் ஒருவர் மட்டுமே தமிழர் ஆவார்.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் குடாநாட்டில் மூன்று தடவைகள் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் நடைபெற்றன. இருந்தபோதிலும், அனைத்துதரத்திலுமாக சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியே வாகனங்களைச் செலுத்திவருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிளுக்குரிய சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டியவர்கள் ஆவர். இவர்களுக்குச் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு எமது அலுவலகத்திற்கு நிரந்தர மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் நியமனம் செய்யப்படவேண்டிய அவசியத்தை உயர் அதிகாரிகள் புரிந்துகொண்டால்மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இவ்வாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஓ-6)

## குடாக்கடலில் இரவுவேளையில் மீன்பிடிக்க அனுமதி வழங்குக!

### குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை

போர்நிறுத்தம், மோதல்தவிர்ப்பு ஏற்பட்டுள்ள இந்தக் காலப்பகுதியிலாவது யாழ்.மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டத்தை தளர்த்தி, குடாக்கடலில் இரவுநேர மீன்பிடிக்கு அரசு அனுமதி வழங்கவேண்டும்.

- இவ்வாறு குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்மாவட்டத்திலுள்ள சில இடங்களில் அப்பகுதிக்குப் பொறுப்பான படையினரது அனுமதியுடன் இரவு நேரங்களில் மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவதாக நாம் அறிகிறோம். ஆனால் குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் எமது மீனவர்கள் இரவுநேர ஊரடங்குச்சட்டம் அதிகாலை 5 மணிக்கு நீக்கப்பட்ட பின்னரே மீன்பிடிக்க அனுமதிக்கும் எல்லையினுள் உள்ளே நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

படையினரின் சோதனை மற்றும் அவர்களது அனுமதிபெற்று மீனவர்கள் கடலில் இறக்க காலை 6 மணியைத் தாண்டிவிடுகிறது. இதனால் போதியளவில் மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் பிடிக்கப்படும் மீனைக் கரைக்குக் கொண்டு வந்து சந்தைப்படுத்த நண்பகல் செல்வதுடன், போதிய விலையும் பெற முடியாமலுள்ளது. மீன் பெருந்தொகையாகப் பிடிக்கப்படும் காலங்களில் அவற்றைப் பதப்படுத்திவைக்கும் சாதனங்களும் குறைவாகவே உள்ளன.

எனவே இரவுநேர மீன்பிடிக்கு அரசு அனுமதி அளிக்கவேண்டியது அவசியமாகும். மீனைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கு யாழ் - கொழும்பு தரைவழிப் போக்குவரத்து வசதியையும் ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்று மேற்படி சங்கத்தின் தலைவர் அ.டெனிஸ்ராதா வலியுறுத்தியுள்ளார். (க-51)

## அரியாலை, கொழும்புத்துறை, குருநகரில் இன்றுமுதல் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினரின் ஏற்பாட்டில் இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை அரியாலை, கொழும்புத்துறை, குருநகா ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் நேர அட்டவணை வருமாறு:-

☆ இன்று செவ்வாய்க்கிழமை -

காலை 8.30மணிமுதல் 10.30 மணிவரை நாயன்மார்கட்டு ச.ச. நிலையம்.

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை நாயன்மார்கட்டு பாரதி ச.ச. நிலையம்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை நல்லூர் தெற்கு ச.ச. நிலையம்.

☆ நாளை புதன்கிழமை -

காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபம்.

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை பெந்தக்கோஸ்தே வழிபாட்டு மண்டபத்திற்கு அருகில் (கண்டி வீதியில்)

2.30மணிமுதல் 4.30 மணிவரை புனித யுவானியார் தேவாலயத்திற்கு அருகில்.

☆ நாளைமறுதினம் வியாழக்கிழமை -

காலை 8.30மணிமுதல் 10.30 மணிவரை பண்டியன்தாழ்வு சந்தான மாதா ஆலயம்.

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை ஈச்சமோட்டை ச.ச.நிலையம்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை பாசையூர் சிறுவர் பூங்கா.

☆ முதலாம் திகதி வெள்ளிக்கிழமை -

காலை 8.30மணிமுதல் 10.30 மணிவரை கொய்யாத்தோட்டம் ச.ச. நிலையம்.

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை சுண்டுக்குளி ச.ச.நிலையம்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை திருநகர் பாரதி ச.ச நிலையம்.

☆ 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை -

காலை 8.30மணிமுதல் 10.30 மணிவரை குருநகர் சென்.றோக் ச.ச.நிலையம்.

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை குருநகர் ச.ச.நிலையம்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை குருநகர் றெக்கிள மேசன ச.ச.நிலையம்.

☆ 6ஆம் திகதி புதன்கிழமை -

காலை 8.30மணிமுதல் 10.30 மணிவரை கிறீன் பீல்ட் ச.ச. நிலையம்.

முற்பகல் 11 மணிமுதல் 1மணி ஒருவரை சென்.செபஸ்தியன் ச.ச. நிலையம்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை மடத்தடி யூபிலி மகப்பேற்று நிலையம். (க-8)

### கடந்த இரண்டு வருடங்களாக

## குடாநாட்டில் அரச ஊழியருக்கு ஆபத்துக்காலப் படி இல்லை

வலி.வடக்கு,ஜன.29

யாழ்.மாவட்டத்தில் மத்திய அரசின்கீழ் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கான ஆபத்துக்காலப் படி கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண அரசின்கீழ் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு கடந்த வருடத்தில் குறிப்பிட்ட காலத்துக்கான ஆபத்துக் காலப் படி வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும்.

இதேபோன்று மத்திய அரசின் கீழ் உள்ள திட்டஅமுலாக்கல் அமைச்சின்கீழ் கடமையாற்றும் அலுவலர்களுக்கும் ஆபத்துக்காலப்படி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கீழ் கடமையாற்றும் எழுதுவினைஞர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கே ஆபத்துக்காலப் படி வழங்கப்படவில்லை. (க-86)

## 'ஜோடி' ஓட்டம்; பெற்றோர் அடிதடி!

தென்மராட்சி,ஜன.29

புது ஜோடி 'கம்பி' நீட்டியதை அடுத்து ஆத்திரங்கொண்ட இருதரப்புப் பெற்றோரும் மோதிக்கொண்டனர். இச்சம்பவத்தில் இரு பெண்கள் (தாய்மார்) உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கரவெட்டி இராச கிராமத்தில் இடம்பெற்றது.

ஒருவருக்கு இரண்டு பற்களும் 'பறந்து'விட்டன என்றும் தெரிவிக் கப்பட்டது. காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நெல்லியடி பொலீஸார் இது குறித்து விசாரணை நடத்தினர். (க-117)

## திருடர் கைவரிசை

அரியாலை,ஜன.29

கொழும்புத்துறை மேற்கில் வளன்புரம்,துண்டி, சுவாமியார் வீதிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமராத பிரதேசங்களில் மீண்டும் திருடர்களின் கைவரிசை தலைதூக்கியுள்ளது.

பட்டப்பகலில் வீடுகளைப் பார்வையிடுவதுபோன்று செல்லும் சில விஷமிகள் வீடுகளின் ஓடுகள் மற்றும் வீட்டுப் பொருள்களை அபகரிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.(க-17)

## சிறுமி மரணம்!

தென்மராட்சி,ஜன.29

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இரண்டரை வயதுச் சிறுமி நேற்றுமுன்தினம் மரணமானார்.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜெயராஜ் தர்சினி என்னும் சிறுமியே மரணமானார்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த வேளையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வலிப்பு ஏற்பட்ட நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சில நிமிட நேரத்தில் அந்தக் குழந்தை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## அதிபர் கூட்டம்


உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அதற்பரானந்தன் தலைமையில் நடைபெறும். (க-152)

## பிராயச்சித்த கும்பாபிஷேகம்

வலி.தெற்கு,ஜன.29

சரசாலை - நுணாவில் அருள்மிகு சிதம்பர விநாயகர் ஆலய பிராயச்சித்த கும்பாபிஷேம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகும். (க-152)



'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கைமூலம் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆனையிறவு படைத்தளத்தின் ஒருபகுதி அங்கு நடந்த பெரும் சமரின் காரணமாக சின்னாபின்னமாகித் தரைமட்டமாகக் கிடப்பதைப் படத்தில் காணலாம்.



கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வேறிடத்தில் தங்கியிருந்த குடும்பம் ஒன்று தமது சொந்த இடத்திற்குத் திரும்புகின்றது. அவர்களின் உடைமைகள் அடங்கிய டிராக்டரையே படத்தில் காண்கிறீர்கள்.




கிளிநொச்சியில் 3 லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைமையகம் கிளிநொச்சியில் அமைந்திருப்பதையும், கிளிநொச்சியில் ஆள்களுக்கு எதிரான கண்ணியில் சிக்கி தனது இடதுகாலை இழந்த இளைஞன் ஒருவனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:தமிழ் நெற்)

## 50 லட்சம் ரூபா செலவில் மானிப்பாய் மத்தியில் சந்தை

வலி.தென்மேற்கு,ஜன.29

மானிப்பாய் மத்தியில் 50 லட்சம் ரூபா செலவில் நவீன சந்தையொன்று அமைக்கப்படவுள்ளது.

100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி வேலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், மானிப்பாய் பிரதேச சபை இதற்கான காணியை இன்னும் தெரிவுசெய்யவில்லை.

மானிப்பாய் ரி.சி.லேன் பகுதியில் அல்லது பழைய இறவுக்கை சந்தைப் பகுதியில் புதிய சந்தையை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது. (க-185)

## வரிவிதிப்பு முறைகளில் புதிய மாற்றங்கள் வரலாம்

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள சில வரிகள் முற்றாக நீக்கப்படலாம். வேறு சில வரிகளில் திருத்தங்கள் செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

வருமானவரி விகிதங்களில் குறைப்புச் செய்யவும், வருமானவரிக் குறைப்பை மூன்று கட்டங்களாக மேற்கொள்ளவும் திட்டமிடப்படுகிறது என்று அறியப்படுகிறது.

பொருள்கள் சேவைகள் வரியையும் (ஜி.எஸ்.ரி.), தேசிய பாதுகாப்பு வரியையும் இணைத்து புதிய வரிமுறை ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது எனவும் கூறப்படுகிறது.

அரசாங்க நிறுவனங்கள் சிலவற்றை தனியார் மயப்படுத்தும் யோசனையும் வரவு - செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்படலாம் எனவும், வங்கிகள் இவற்றில் அடங்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.தே.மு. அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் மார்ச் மாதம 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும். (ஐ)

## அச்சுவேலி குடிதண்ணீர் திட்டம்; மேலும் 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

### இரண்டாம் கட்டப்பணிகள் விரைவில் ஆரம்பம்

வலி.கிழக்கு,ஜன.29

அச்சவேலி குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை மேலும் விஸ்தரிக்க 100 நாள் வேலைத்திட்டம் மூலம் 50 லட்சம் ரூபா நிதியினை வலி.கிழக்கு பிரதேச சபை ஒதுக்கியுள்ளது.

இந்தப் பகுதியில் குடிதண்ணீர் பிரச்சினை காரணமாக பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு முன்னர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் 50 லட்சம் ரூபா செலவில் முதற்கட்டப்பணிகள் நடைபெற்று முடிந்திருந்தபோதும், வேலைத்திட்டம் பூர்த்தியாகவில்லை. இந்தப் பணிகளைப் பூரணமாக்கவே இரண்டாங்கட்டமாக 50 லட்சம் ரூபா செலவில் திட்டவேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-180)




யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடத்தப்பட்டது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் கு.வைத்திலிங்கம், வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், இளைப்பாறிய மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநர் செல்வி க.வைத்திலிங்கம், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத் தலைவருமான திருமதி ஏ.எல்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், செல்வி மைதிலி பூபாலசிங்கம் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (ம-10)

## படை அதிகாரிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்திருந்த மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் பாயிஸ் முஸ்தபா, ஆணைக்குழு ஆணையாளர் என்.செல்வக்குமாரன் ஆகியோர் இராணுவ பொலீஸ் அதிகாரிகளை நேற்றுமுன்தினம் சந்தித்தனர். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கைதுகள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக அவர்கள் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. (ஜ-3-4)

## மெய்வன்மைப் போட்டி

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி அதிபர் ச. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கமும் கலந்துகொண்டு சிறப்பிப்பார். (ம-8-90)

## கொழும்புத்துறை சுவாமியார் வீதிக்கு மின்சாரம்!

அரியாலை,ஜன.29

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதிப் பகுதிக்கு மின்சார விநியோகம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் ஓரளவு மீளக்குடியமர்ந்துள்ளதை அடுத்து மின்சார விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது வரையிலான குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அநேகமான வீடுகளில் இராணுவத்தினர் தங்கியுள்ளனர். அவர்கள் வீடுகளை விட்டுச்சென்றால் அந்த மக்களும் மீளக்குடியமரத் தயாராக இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. (க-17)

## கத்தரிக்காய் திருடர் பிடிபட்டனர்!

யாழ்ப்பாணம்,ஜன.29

நீர்வேலி தெற்கில் கத்தரிக்காய் பயிரிட்ட தோட்டம் ஒன்றில் புகுந்து காய்களைப் பிடுங்கிக்கொண்டு அங்கிருந்து செல்லமுற்பட்ட திருட்டுக் கோஷ்டி ஒன்றை அந்தப் பகுதி மக்கள் மடக்கிப் பிடித்தனர்.

திருட்டுக் கோஷ்டியினரும் கைப்பற்றப்பட்ட ஒரு சாக்கு கத்தரிக்காயும் அந்தப் பகுதி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கத்தரிக்காய் திருட்டுக்கள் தொடர்வதால் விவசாயிகள் பகல்வேளையிலும் தங்கள் தோட்டங்களில் காவல் நிற்க வேண்டியுள்ளது. (க-17)

# தொல்லை தவிர்ப்புக் குழு அடுத்தவாரம் முதல் இயங்கும்

கொழும்பு,ஜன.29

தமிழ்மக்களுக்கு எதிராகப் படையினர் மேற்கொள்ளும் அத்துமீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டுவந்த தொல்லை தவிர்ப்புக் குழு மீண்டும் அடுத்த வாரத்தில் இருந்து இயங்கவிருக்கின்றது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் இடம்பெறும் இந்தத் தொல்லை தவிர்ப்புக் குழு பிரதி திங்கட்கிழமைதோறும் கூடி விசாரணைகளை நடத்தி வந்தது.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னர் இந்தக் குழுவுக்கான புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாததால் குழு சில காலமாகச்செயற்படவில்லை.

தற்சமயம் குழுவுக்கான உறுப்பினர்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். இதனையடுத்து அடுத்த வாரம் முதல் குழு இயங்கவிருக்கிறது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரன் ஆகியோரை குழு உறுப்பினர்களாகப் பிரதமர் நியமித்துள்ளார்.(ம-3)

# தமிழ்க் கைதிகளின் நலன்களை கவனிக்கவென தனியான பிரிவு!

## இந்து கலாசார அமைச்சில் அமைப்பு

கொழும்பு,ஜன.29

தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை, அவர்கள் மீதான வழக்குகள் ஆகியவற்றைக் கையாள தனிப் பிரிவு ஒன்று இந்து கலாசார அமைச்சில் அமைக்கப்பட்டுள்ளது.

இரு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவு 24மணி நேரமும் இயங்கும்.

ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கைதானமைக்கான காரணம் ஆகியவற்றைக் கவனிக்கும் பணி அவர்களில் ஓர் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறையில் உள்ளவர்களின் வழக்குகள் தொடர்பான விடயங்களைக் கையாள மற்றுமொரு அதிகாரியும் செயற்படுவர். அவர் ஒரு சட்டத்தரணியாக இருப்பார்.

இந்தப் பிரிவின் செயற்பாடுகளை அமைச்சர் தி.மகேஸ்வரன் கவனிப்பார். (ம-3)

## விளையாட்டு நிகழ்வு

வடமராட்சி கிழக்கு,ஜன.29

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நாளை புதன்கிழமை அம்பன் 'பிங்பொங்' விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-182)

## மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி

வடமராட்சி கிழக்கு,ஜன.29

பளை, மருதங்கேணி பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி, கிராம அபிவிருத்தி திணைக்கள அனுசரணையுடன் இன்று புலோலியில் உள்ள பளை பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பளை பிரதேச செயலர் சுபத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்துவைப்பார். (ம-182)


மின்வெட்டா? விற்பனையில் முதலிடத்தில் நிப்போன்

முற்றிலும் தானியங்கியான இன்வேட்டர்கள்




2 வருட உத்தரவாதம்

புகை சத்தம் இல்லை எரிபொருட் செலவு

ரூ.10,990 க்கு மேல் 10% கழிவு

உயர் தொழில்நுட்பம் வாய்ந்த முற்றிலும் தானியங்கி *நிப்போன் இன்வேட்டர்* இருந்தால் நீங்கள் மின்சாரமின்றி ஒருபொழுதும் இருக்கும் அவசியமிராது.

கேள்வி : ஒரு இன்வேட்டர் என்பது என்ன?

பதில் : ஒரு இலத்திரனியல் சாதனம். பற்றரி ஒன்றினுள் தேக்கப்பட்டிருந்த DC மின் வலுவை வீட்டுப்பாவனைக்கான AC மின்னாக மாற்றித்தருகிறது.

மின்வழங்கல் நின்றவுடன் நிப்போன் இன்வேட்டர் உடனே செயறபட்டு தடங்கலின்றி மின்சாரத்தை தொடர்ந்து வழங்குகின்றது.

அது போலவே, மின் வழங்கல் இயல்பு நிலைக்கு திரும்பியதும் தானியங்கியாக செயற்பட்டு செயலிலிருந்து ஓய்வடைந்து விடுகிறது. ஆயினும்தொடர்ந்து பற்றரிக்கான மின்னேற்றமும் தொடங்கி விடுகிறது.

2 அடி நீள அவசர நிலை லைட் (AC/DC) ரூ.1490



விசிறியும் லைட்டும் அடங்கிய பெட்டி (AC/DC) ரூ.3300

லங்கா நிப்போன்

10, ட்றிலோனி பிளேஸ் (பால்சாலையின் பின்புறம்)
பம்பலப்பிட்டி சந்தி, கொழும்பு -04. தொ.பே: 589992, 582365

*Fully-Automatic Nippon Inverter fit and forget system.*



திகழ் பிறிண்ரேர்ஸ்

K.K.S.வீதி, இணுவில்.

கனொனி ஓ(f) செற், கொம்பியூட்டர், றோணியோ, கலர் பிறிண்டிங் வேலைகளைச் செய்துகொள்ளலாம். (050)


## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
## இணைக்கப்பட்ட விரிவுரையாளர் பதவி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பின்வரும் துறைகளில் விரிவுரையாளராக இணைப்புப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வஞ்ஞானம்
கணிதம்
ஆங்கிலம்
தொழில்சார் கல்வி
நடனம்
சங்கீதம்
சித்திரம்
நடனக விஞ்ஞானம்

**தகைமைகள்:**

01) விண்ணப்பதாரி இலங்கை ஆசிரியர் சேவையில் குறைந்தது 3 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
02) விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
03) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் முதலாம், இரண்டாம் (Upper) வகுப்புப் பட்டத்துடன், கல்வியியல் பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்படிப்புடன், கல்வியியல் பட்டப்பின்படிப்பில் திறமைச் சித்தி அல்லது கல்வியியல் பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தனது சுயவிவரத்தினை தமது கல்லூரி அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளருடாக,

**பீடாதிபதி** (President),
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் 08. 02. 2002அம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

☆ சித்திரம், நடனம், சங்கீதம் துறைகளுக்கு குறிப்பிட்ட துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், டிப்ளோமாப்பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பீடாதிபதி,**
***யா.தே.க.க.***

(C-20524)

# லட்சியத்துக்காக சிறையில் வாடும் போராளிகளுக்கு விரைவில் விடுதலை

## அமைச்சர் மகேஸ்வரன் உறுதி

உயரிய லட்சியம் ஒன்றுக்காக சிறையில் வாடும் போராளிகளுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும். அதற்காக கூட்டாகப் பிரார்த்தனை செய்யுங்கள்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மேற்கண்டவாறு களுத் துறைச் சிறைக்கைதிகளிடம் கோரினார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகளின் வழிபாட்டிற்காக விக்கிரகங்களை பிரதிஷ்டை செய் யும் வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சொந்த விடயத்துக்காக குடும் பத்தை, சுற்றாரைப் பிரிந்து நீங்கள் இங்கு கைதிகளாக இருப்பதாக நினைக்கவேண்டாம். உயரிய லட்சி யத்துக்காகவே இங்கு இன்னல் களுக்கு மத்தியில் இருக்கிறீர்கள். விரைவில் உங்களுக்கு விடுதலை கிடைக்கும்.

சிறைகளில் உள்ள போராளி களையும், அப்பாவிகளையும் விடு தலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் நாடாளுமன்றத்துக்கு என்னை யாழ். மக்கள் அனுப்பியுள்ளனர். அந்த மக்களின் விருப்பப்படி விரைவில் தமிழ்க் கைதிகளை விடுவிக்க நட வடிக்கை எடுப்பேன்.

சிறையில் உள்ளவர்களின் மன அமைதிக்காகவும் விடுதலைக்குப் பிரார்த்தனை செய்வதற்காகவும் விக் கிரகங்கள் இங்கு பிரதிஷ்டை செய் யப்பட்டுள்ளன. கடவுளையும் சிறை யில் வைத்துள்ளோம். இங்கிருந்து விடுதலையாகிச் செல்லும் கடைசிப் போராளி விக்கிரகங்களையும் எடுத் துச் செல்லவேண்டும் - என்றார்.

இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஆத்மகணானந்தாஜி பேசுகையில் கூறியதாவது:-

சிறையில் வாடும் இளைஞர்கள் அமைதியாக தியானம் செய்ய இங்கு அமைக்கப்பட்ட வழிபாட்டு இடங்கள் உதவும். தமது விடுதலைக்காக கைதிகள் இந்த வழிபாட்டு இடங் களில் அமர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும் - என்றார். (ஒ-3)

## கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால்

# யாழ்.செயலகம் முன்பாக பெப்.13ஆம் திகதி மறியல்

### பாதுகாவலர் சங்கம் அறிவிப்பு

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான பூரண விவரங்களை பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிக்கு முன்பு யாழ்.அரசாங்க அதிபர் வழங்காவிட்டால் அன்றைய தினம் யாழ்.செயலகம் முன்பாக மீண் டும் மறியற்போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக காணாமற்போனோர் பாது காவலர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட் டது. அடுத்த மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ள புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவை செயலகத்துக்குள் செல்லவிடாமல் மறியற் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் சங்கப் பிரதிநிதிகள் அறிவித் துள்ளனர்.

★ கைது செய்யப்பட்டவர்களில் தற்போது சிறைகளில் தடுத்து வைக கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியல் -

★ காணாமற்போனதாகக் கூறப் படுபவர்களில் எவராவது தென்பகுதிச் சிறைகளில் உள்ளனரா என்று நேரில் சென்று பார்வையிட அனுமதி -

★ காணாமற்போனவர்களில் வன்செயல்களால் கொல்லப்பட்டதா கத் தெரிவிக்கப்பட்டோர் குறித்து பொறுப்பு வாய்ந்தோரால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் -

ஆகியவற்றை தமக்கு வழங்க வேண்டும் என்று கோரி முன்னர் அரசாங்க அதிபரிடம் காணாமற்போ னோர் பாதுகாவலர் சங்கம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தது.

இதே கோரிக்கைகளை முன் வைத்து ஏற்கனவே செயலகம் முன் பாக போராட்டம் ஒன்றும் நடத்தப் பட்டது. கோரிக்கைகளை நிறை வேற்ற அரசாங்க அதிபருக்கு அவ காசமும் அப்போது வழங்கப்பட்டது. (ஒ-10-180)

## கும்பழாவளைக்கு விசேட பஸ்

யாழ்ப்பாணம்,ஜன.29

அளவெட்டி கும்பழாவளைப் பிள் ளையார் கோயில் மஹாகும்பாபிஷே கத்தை முன்னிட்டு நேற்றுத் திங்கட் கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக் கிழமை வரை விசேட பஸ் சேவை களை வடபிராந்திய போக்குவரத்து சபை நடத்தி வருவதாக ஆலய நிர் வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து அளவெட்டியூடாகத் தெல்லிப்பழை செல்லும் (தடம் எண் 768) பஸ்கள் கேணிக்கரை வைரவர் ஆலயம் வரை தமது சேவையை நடத்துவதாகவும் -

கும்பாபிஷேக தினமான எதிர் வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு யாழ்.பஸ்நிலையத்திலி ருந்து ஆலயத்துக்கு விசேட சேவை நடத்தப்படும் என்றும் - தெரிவிக்கப் பட்டது. (ஒ)

## அலவி மௌலானா மேல்மாகாண ஆளுநர்

முன்னாள் அமைச்சரும் தொழிற் சங்க பிரமுகருமான அலவி மௌ லானா மேல்மாகாண ஆளுநராக நியமனம் செய்யப்படவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இவர் தமது சத்தியப்பிரமாணத்தை செய்து கொள்வதற்கு ஏதுவாக ஜனாதிபதி யால் கடிதம் அனுப்பப்பட்டது. (ம-6-9)

## இணையத்தில் 'பாதுகாவலன்'

யாழ்ப்பாணம்,ஜன.29

இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க வார ஏடான 'பாதுகா வலன்' தனது 125ஆவது ஆண்டு நிறை வில் தனக்கென ஓர் இணையத் தளத்தை ஆரம்பித்துள்ளது.

யாழ். மறை மாவட்டத்தில் நடை பெறும் முக்கிய நிகழ்வுகள் உட்பட ஆயரின் செய்திகளை வாசிக்க விரும் புபவர்கள் www.paathukavalan.com என்ற இணையத்தள முகவரியுடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடி யும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22 - 06 - 1927

உதிர்வு 31 - 12 - 2001

### அமரர் தம்பு சரவணை

*(மந்துவில், கொடிகாமம்)*

நாள்கள் பல சென்றாலும்
உங்கள் பாச திருமுகத்தை
எங்களால் மறக்க முடியவில்லையே!

30.01.2002 புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
ச.கிருஸ்ணசாமி
(ப.நெ.வ.அ.கூ.சங்கம், சாவகச்சேரி)

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (061)

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை

நுணாவில் சந்தி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை நேற்று (28.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான அபிராமிப்பிள்ளை, படைவீரசிங்கம், குமாரசிங்கம் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை அவரது தற்காலிக வதிவிடத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மயில்வாகனம் (பெறாமகன்)
(அதிபர் - மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை)

தற்காலிக முகவரி:
*இணுவில் மேற்கு,*
*கந்தசுவாமி கோயிலடி.* (C/20528)

## மணமகள் தேவை

யாழ்.உயர் குடும்பத்தைச் சேர்ந்த அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக (Doctor M.B.B.S) வேலைசெய்யும் 31 வயது நிரம்பிய (இடது காலில் சிறிது பாதிப் புற்ற, மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்ல இருக்கும்) டாக்டருக்கு பெற்றோர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, அழகிய, 24 - 29 வயதிற்கு உட்பட்ட பண்பான பெண்ணை எதிர்பார்க்கிறார்கள். (தொழில் புரி யும் பெண் விரும்பத்தக்கது) தகுதியுடை யோர் குடும்பவிவரத்துடன் சாதகக் குறிப்பை அனுப்பிவைக்கவும். தொலைபேசி இருப்பின் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

C/O உதயன்
(067) விளம்பரஇலக்கம்: 1448

ராஜா யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன், ஸ்நேகா, அப்பாஸ்
பம்மல் K சம்பந்தம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (பு.நே.)
(C/20092)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், இஷா, ரம்யா கிருஷ்ணன், வடிவேல் நடித்த
நரசிம்மா
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)

நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
சரத்குமார், மீனா மற்றும் பலர் நடித்த
ரிஷி
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

## மரண அறிவித்தல்கள்

### ஆசைப்பிள்ளை பேரின்பநாதன்

(இளைப்பாறிய பொறியியலாளர், U.K.)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை பேரின்பநாதன் 26.01.2002 லண்டனில் கால மானார்.

அன்னார் மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆசைப் பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினம்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் கமலாதேவி (U.K.) அவர்களின் அன்புக் கணவரும், சிவ ரம்மியா (U.K.) அவர்களின் அருமைத் தந்தையும் மகேந்திரன் (பொறி யியலாளர் U.K.) அவர்களின் மாமனாரும் ஜெனன், உமா (U.K.) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் வாமதேவா, காலஞ்சென்ற மகாதேவா மற்றும் திருமதி சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினகோபால் மற்றும் திருமகள், தனலட்சுமி காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் தனலட்சுமி (U.K.), சிறிகரன் (U.K.), லட்சுமணன் (U.K.), சதீஸ், தர்மினி, ராதிகா, ரேணுகா, அமிர்தகலா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாமதேவா,
திருமதி சரஸ்வதிதேவி
செல்வராசா

*கொக்குவில் கிழக்கு.* (063)

### கணபதிப்பிள்ளை இராமநாதன்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் வர்த்தகர் கணபதிப்பிள்ளை இராமநாதன் நேற்று (28.01.2002) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் ராஜம்மா, செல்லத்துரை, சிவநாதன் (வன்னி), தங்கராஜா, பாலகிருஷ்ணன் (கனடா),அரசரட்ணம் (கனடா), இராமகிருஷ்ணன், பிருந்தா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ராஜதுரை (OA/AO, யாழ். கச்சேரி), மனோன்மணி, யோகராணி, புஷ்பராணி, ரோகினி (கனடா), பாலகௌரி (கனடா), ஆனந்தராஜா (கணக்காளர், கொழும்பு), ஆகியோரின் மாமனா ரும் திலீபன் (சுவிஸ்), குமணன் (கனடா), மேகலா (கொழும்பு), மீரா (யா/பல்கலைக்கழகம் நுண்கலைப்பீடம்), கபிலன், ராகுலன் (ஜேர்மனி), கஸ்தூரி, கௌசல்யா, பகுணா, கீர்த்தனா, வர்மா, மிதிலா, லக்ஷணா, யஷோஷன், பரிபூரணன், நிகேதன், நிவேதா, புருஷோத், றொஷானி ஆகியோரின் பேரனும் ஹம்சத்வனியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை புத்தூரில் நடைபெற்று, பூதவுடல் கிந்துசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இராஜதுரை
(மருமகன்)

*பருத்தித்துறை வீதி,*
*புத்தூர்.* (060)

### டானியல் ஞானப்பிரகாசம்

(இயக்குநர், நோர்லி என்ரபிரைசஸ்)

நவாலியைச் சேர்ந்த டானியல் ஞானப்பிரகாசம் நேற்று (28.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அடைக்கலம் தம்பதியினரின் அன்பு மகனும் திருமதி M.T.ஞானப்பிரகாசத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), அன்புக் கணவரும் ஜெகான் (கணனி பொறியியலாளர், கொழும்பு), ஜெயந்தன் (நில அளவையாளர், கொழும்பு), றஞ்சன் (பொறியியலாளர், கொழும்பு), ஜனனி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு.M.D.யேசுதாசன் (பொறியியலாளர், கொழும்பு), தம்பிநாயகம் அல்பேட், காலஞ்சென்றவர்களான இம்மனு வேல், பிரான்சிஸ்சேவியர் மற்றும் திருமதி பி.எவ்.சின்னத்துரை (அதிபர், யா/புனிதர் சாள்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்), திருமதி புஞ்சிபண்டா (கண்டி), திருமதி திரேசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திரு.ஜெ.பேதுறுப் பிள்ளை (ஓய்வுபெற்ற மக்கள் வங்கியாளர்), திருமதி ச.மரியாம்பிள்ளை, திருமதி க.சுவாம்பிள்ளை ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பி.எவ்.சின்னத்துரை
(சகோதரி)

*சென்பீற்றர்ஸ் வீதி,*
*நவாலி.* (C/20526)

### இளையதம்பி வல்லிபுரம் (காசிப்பிள்ளை)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வல்லிபுரம் நேற்று (28.01.2002) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் பத்மாவதி, பத்மநாதன் (C.T.B.), காலஞ்சென்றவர்களான பரமநாதன், பரமேஸ்வரன் மற்றும் இரகுநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் முருகுப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவகுரு, நல்லதம்பி மற்றும் இரா சையா, பொன்னுத்துரை (கே.சி.டபிள்யூ) ஆகியோரின் மைத்துனரும் பாலசிங்கம், செல்வராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
வ.பத்மநாதன் (C.T.B. - மகன்)

*பாடசாலை வீதி,*
*தாவடி கிழக்கு.* (066)

# ஆயுதக் களஞ்சியத்தில் தீ விபத்து; நைஜீரியாவில் 580 பேர் உயிரிழப்பு!

## வெடித்துக் கிளம்பிய ஷெல்கள் குடியிருப்புகள் மீது விழுந்தன

லாகோஸ்,ஜனவரி29

**ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் பெரிய நகரான லாகோஸில் நேற்றுமுன்தினம் ஆயுதக் களஞ்சியம் ஒன்று தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 580 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருவதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.**

'இகேஜா' இராணுவ முகாமின் அருகே உள்ள சந்தைப் பகுதியில்



வெடித்துச் சிதறுகிறது ஆயுதக் களஞ்சியம்.

பற்றிய தீ இராணுவ முகாமில் இருந்த ஆயுதக் களஞ்சியத்துக்கும் பரவியது. இதனையடுத்து ஆயுதக்களஞ்சியம் வெடித்துச் சிதறத் தொடங்கியது. அங்கிருந்து சீறிக் கிளம்பிய ரொக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகள் சுற்றிலும் உள்ள குடியிருப்புகளில் வீழ்ந்து வெடித்தன.

இதனால் அஞ்சி ஓடிய மக்கள் அருகே உள்ள ஆழமான இரு கால்வாய்களில் தவறிவீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களும் குழந்தைகளும் ஆவர்.

குடியிருப்புப் பகுதிகளில் வெடிவிபத்தால் மின்சாரக் கம்பிகள் அறுந்து வீழ்ந்ததால் மின்சாரம் தாக்கியும் பலர் இறந்தனர். இராணுவ முகாமில் தீயில் சிக்கியும், புகையால் மூச்சுத் திணறியும் இராணுவத்தினரும் அவர்களது குடும்பத்தினரும் இறந்தனர்.

குடியிருப்புப் பகுதிகளின் மத்தியில் இராணுவ முகாம் அமைந்திருந்ததாலேயே உயிரிழப்புகள் அதிகரித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த அனர்த்தத்தில் தேவாலயம், மருத்துவமனை, பாடசாலை ஆகியவை மோசமாகச் சேதமடைந்தன. வெடிக்காத பல ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து கிடப்பதால் சடலங்களை அகற்றுவதில் மீட்புப் பணியாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோககுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

## மருவுக்கு மின்சாரம்

மன்னார்,ஜன.29

பல வருடங்களின் பின்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குத் தெற்கிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. நேற்றுப் பிற்பகல் 2.45 மணிக்கு வவுனியா பிரமணாளங்குளத்திலிருந்து மடுத் தேவாலயப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. இதன் மூலம் புதிய சகாப்தம் ஒன்று உருவானதாகக் கூறப்படுகிறது.

## பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தைகளுக்குப் பாதிப்பு

பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தைகள் பாதிக்கப்பட்ட இரு சம்பவங்கள் கல்வியங்காட்டிலும் மானிப்பாயிலும் இடம்பெற்றுள்ளன.

கல்வியங்காட்டில் கமீலா என்ற 3வயதுக் குழந்தை வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த சமயத்தில் கையில் கிடைத்த நுளம்புத்திரியை கடித்துத் தின்றதால் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாயில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் போத்தலில் இருந்த மண்எண்ணெய்யை தவறுதலாகக் குடித்த றெனோல்ட் என்ற 15மாதக் குழந்தையும் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கூறுகையில் ஆபத்தான பொருள்களை குழந்தைகளின் கைகளுக்கு எட்டாமல் பாதுகாப்பதில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

சமையல் உட்பட அன்றாட வீட்டு வேலைகளில் ஈடுபடும் சமயங்களில் பெற்றோர்கள் குழந்தைகள் மீதும் கவனம் செலுத்தவேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-6)

## சமாதான முயற்சிகளில் புலிகளே அதிக அக்கறை

### பெண்கள் அமைப்பின் தலைவி கூறுகிறார்

கொழும்பு,ஜன.29

சமாதான முயற்சிகளில் அரசை விட விடுதலைப் புலிகளே அதிக அக்கறை காட்டி வருகின்றனர். ஆகவே அவர்கள் மீதான தடையை அரசு உடனடியாக நீக்கவேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளார் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி விசாகாதர்மதாஸ.

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட போர்க்கைதிகளைச் சென்று அழைத்துவந்தது தொடர்பாகக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

விசாகா தர்மதாஸ மேலும் கூறுகையில்:-

ஒரு தாய் என்ற ஸ்தானத்தில் இருந்து பெண் இனத்தின் சார்பில் இந்தக் கோரிக்கையை அரசுக்கு விடுக்கின்றேன்.

சமாதானத்துக்கான இந்தச் சந்தர்ப்பத்தை அரசு நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். இருதரப்பும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

போரினால் ஏற்பட்ட இழப்புகளையும். அவற்றால் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும், அவர்களது அவலவாழ்வையும் நான் நேரில் கண்டேன்.

அதனால் சமாதானத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்துள்ளேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-6-4-ரி)

## புலிகள் மீதான தடை நீக்கத்தை எதிர்க்கவில்லை என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,ஜன.29

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் ஐக்கியத்தை காப்பாற்ற விழைவது என்ற வகையில் புலிகளுக்கு எதிராக ஜே.வி.பி. முன்னெடுக்கும் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவோ, தமிழின உணர்வுகளுக்கு குந்தகமானதாகவோ மாறிவிடக்கூடாது.

நாடாளுமன்ற அங்கத்துவத்தைக் கொண்டிருக்கும் கட்சிகள் என்றவகையில் ஜே.வி.பியின் உறுப்பினர்களுக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக கருத்துப் பரிமாறல்கள் அவ்வப்போது இடம்பெற்று வருவது உண்டு. இதில் விசேடமான காரணங்கள் எதுவும் இல்லை. எனினும் ஜே.வி.பியினருடன் ஈ.பி.டி.பியைச் சம்பந்தப்படுத்தி வெளிவந்துள்ள சில செய்திகள் விஷமத்தனமானவையாகும்.

ஒரு தரப்பு ஏற்றுக்கொள்வதற்கு சிரமமான கோரிக்கையை மறு தரப்பு வலியுறுத்துவது பேச்சு சுமுகமாகத் தொடர்வதற்குக் குந்தகமாக அமையலாம் என்பதும் -

பேச்சு தொடங்கப்படுவதற்கு தடை ஒரு தடைக்கல்லாக இருக்காது என்பதும் - எமது கட்சியின் நிலைப்பாடாகும். ஆகவே எமது கட்சி புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு எதிரானது என்பது முற்றிலும் தவறானது ஆகும். என்றுள்ளது. (ஒ-3)

### வெளிவிவகார அமைச்சர் லண்டன் பயணம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலைமையிலான குழு ஒன்று நேற்று முன்தினம் லண்டன் சென்றுள்ளது.

இன்று ஆரம்பமாகும் பயங்கரவாதம் தொடர்பான பொதுநலவாய குழுவின் முதலாவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் லண்டன் சென்றுள்ளனர்.(ஒ-6)

### முதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை பிரதமரிடம் எடுத்துக்கூறவிருப்பதாகவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

வடமேல் மாகாணத்தில் நேற்று நடந்த பொங்கல் விழா நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார். (ஐ-3-173)

### உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மன்னார் நகருக்கு வந்து திரும்ப வாய்ப்புக்கிட்டும் என்றும் -

திங்கள் முதல் வெள்ளி வரை இந்த வீதி பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-173)

### கேதீஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டது. ஆலய பூசைகள் முடிவடைந்த பின்னர் பிற்பகல் 1.30 மணிக்கு பஸ் நகருக்குத்திரும்பியது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-3-173)

### பாலசிங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்கனவே பெற்றுள்ள நோர்வேக் குழு அது தொடர்பாக புலிகள தரப்பிலிருந்து மேலும் விவரங்களைப் பெறுவதற்காகவே நேற்று பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இந்த விடயம் தொடர்பாக அரசுத் தரப்புடனும் மேலும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

நிரந்தரப் போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் எல்லா அம்சங்களையும் இரு தரப்புகளும் ஏற்று அவற்றுக்கு இணங்கும் பட்சத்தில் அடுத்தமாதம் 24ஆம் திகதிக்கு முன்பாக நிரந்தரப் போர்நிறுத்தப் பிரகடனத்தை நோர்வே வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3-4-6)

### நோயாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையானவர்களை வவுனியாவுக்கு சிகிச்சைக்கு அழைத்துவரமுடியாமல் உள்ளது.

எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து வவுனியாவுக்கு நோயாளர்களை அழைத்து வர விசேட பஸ்சேவை நடத்த அனுமதிக்கவேண்டும் இதன் மூலம் அங்குள்ள நோயாளர்கள் சுலபமாக வவுனியாவுக்குச் சென்று சிகிச்சை பெற வழி ஏற்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


சுனில் ஆட்ஸ்

20.01.2002 வரை ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களை பெற்றுக்கொள்ளலாம்.

01.02.2002 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

வீடியோ கசற்றுக்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்

305, ஸ்ரான்லி வீதி, யாழ்.

குறிப்பு: 1. வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

2. CDஇல் இருந்து CDஇற்கு பாடல் பதிவுசெய்து தர 250/= மட்டுமே. (C/20527)



நவீன கணனிகள் விற்பனையில்



Pentium 4 (1.6,1.7 GHz)

PentiumIII 933, 1000 MHz

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

கணனிகளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் மேற்கொள்ள முடியும்.

IIS விற்பனைப் பிரிவு,

100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

TP. No : 2831



NIRU

TUITION CENTRE

Kondavil.

PHYSICS

A/L - 2002

Radiation

ஆரம்பம்: 31.01.2002

புதன் 6.30 p.m.

A/L - 2003

Vibrations and Waves

ஆரம்பம்: 31.01.2002

புதன் 5.00 p.m. (062)

திரு. சோதிலிங்கம்



A/L - 2004

கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

01-02-2002 ஆரம்பம்

(பிரத்தியேக வகுப்புகளாக)

Phy. - திரு. சந்திரப்பிரகாசம்

Che. - திரு. எட்வேட்

C.Mat. - திரு. அம்பி

Bio. - பிரபல ஆசிரியர்

அனுமதிகள் இன்றுமுதல் பெறலாம்.

(உங்கள் நேரத்திற்கேற்ப வகுப்புகள்).

(கலை, வர்த்தகப் பிரிவுகள் பிரத்தியேக வகுப்புகளாக) (064)

நல்லூர் சயன்ஸ் அக்கடமி


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிஐயா நாகம்மா

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தம்பிஐயா நாகம்மா நேற்று (28.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் (பரராஜசிங்கம்) அன்பு மனைவியும் சரஸ்வதி, மலர் (கனடா), கணேசலிங்கம் (கனடா), கணேசமூர்த்தி (வலி.தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்), கணேசநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம் (கனடா), கிரி (கனடா), இராஜேஸ்வரி, ஞானரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஸ்வலிங்கம், பாக்கியம், இரத்தினம், நடராசா, இளைய தம்பி, தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயநந்தன், பரந்தாமன், ஜலஜா, சுஜனி, கலெக்ஷன், சிந்துஜா, சிந்துஜன், தயாபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

த.கணேசமூர்த்தி (மகன்)

(வலிகாமம் தெற்கு பிரதேச சபை)

இணுவில் மேற்கு. (C/20529)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361.ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.